இயேசுவோடு

Rev. S.A. சுந்தரராஜ்

சத்திய முழக்க ஊழியங்கள்

இயேசுவோடு

Rev. S.A. சுந்தரராஜ்

சத்திய முழக்க ஊழியங்கள்

வேலூர் – 6.

முதல் பதிப்பு :

இரண்டாம் பதிப்பு : 2022

பிரதிகள் : 1000

Published by : **SATHTHIYA MUZHAKKAM MINISTRIES**
#22, I West Cross,
West Gandhi Nagar,
Vellore - 632 006.

Printed by : Hosanna Printers
Sivakasi

Price :

இந்தப் புத்தகத்தின் எந்தப்பகுதியையும்
ஆசிரியரின் முன் அனுமதியின்றி
மறுபதிப்பு செய்யக்கூடாது.

அறிமுக வார்த்தைகள்....

பலரோடு பல சூழ்நிலைகளில் நாம் பழகுகிறோம். ஆதனால் பல பாடங்களை அனுபவரீதியாகக் கற்றுக்கொள்கிறோம். ஆனால் நாம் அதிகம் பழகவேண்டிய ஒருவர். நமது அருமை இரட்சகர் இயேசுவே. அவரோடு நாம் செலவழிக்க வேண்டிய நேரத்தைச் செலவழிக்கிறோமா?

வேத சத்தியங்கள் மந்திரங்களல்ல குறிப்பிட்ட சில அதிகாரங்களை ஒரு நாளில் வாசிப்பது, வெறும் வாடிக்கையாக இருந்தால். நாம் கர்த்தரோடு பழகமுடியாது. வேத சத்தியங்கள் மத்தியில் நம் ஆத்துமா சஞ்சரிக்கவேண்டும். வார்த்தைக்குப் பின்னால் கிரியை செய்யும் சத்திய ஆவியானவரை நாம் உறுதியாய்ப் பற்றிப் பிடிக்க வேண்டும். அப்பொழுது நம் ஆத்துமா நித்தியத்தை நோக்கி, கர்த்தரோடு பயணிக்கும்.

இந்த நோக்கத்தோடு எழுதப்பட்டதுதான் உங்கள் கரங்களிலிருக்கும், “இயேசுவோடு” என்ற நூல். உங்கள் கண்ணீரைத் துடைக்கும் புத்தகம் அல்ல இது. பாவத்தை, அக்கிரமத்தை நினைத்து கண்ணீர்விடத் தூண்டும் புத்தகமே இது. உலகில் எப்படி வளமுடன் வாழ்வது என்ற கேள்விக்கு இந்தப் புத்தகத்தில் பதில் கிடைக்காது. லாபமானதைக் கிறிஸ்துவுக்காக எப்படி நஷ்டமென்று எண்ணுவது என்பதற்கு வழி சொல்லும் புத்தகமே “இயேசுவோடு” என்பது.

இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுதே கர்த்தர் இயேசுவோடு, நீங்கள் சஞ்சரிக்க ஆரம்பிப்பீர்கள். இந்த அனுபவம் உங்களை முற்றிலும் மாற்றும் என்று நம்புகிறேன். இந்த நம்பிக்கையில் இந்த நூலை கிறித்தவ எழுத்துலகிற்குச் சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் சகோதரன்

S.A. சுந்தரராஜ்

உள்ளே....

1	பெத்லகேமில் இயேசுவோடு	5
2	யோர்தானில் இயேசுவோடு	24
3	வனாந்தரத்தில் இயேசுவோடு	52
4	ஆலய உப்பரிகையில் இயேசுவோடு	71
5	மலை உச்சியில் இயேசுவோடு	80
6	ஜெப ஆலயத்தில் இயேசுவோடு	95

பெத்லகேமில் இயேசுவோடு

உலகமெங்கும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் ஆரவாரம் கேட்கிறது. வேதம் சொல்லாத ஆர்ப்பாட்டங்கள், கொண்டாட்டங்களுக்கு மத்தியில் நாம் இப்பொழுது பெத்லகேமிற்குச் சென்று என்ன நடக்கிறதென்று பார்ப்போமா?

1. பெத்லகேம் :

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களில் சிறியது..." (மீகா 5:2) ஆயிரம் ஊர்களில் மிகச்சிறிய ஊர் பெத்லகேம்! ஆனால் இன்று உலகமே அறிந்த ஊர்களில் ஒன்று பெத்லகேம். ஏனெனில் உலக இரட்சகரும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய இயேசு இங்கேதான் பிறந்தார். இயேசுவின் பிறப்பினால் இந்தச்சிறிய ஊர் பேரும் புகழும் அடைந்தது.

இங்குதான் இரட்சகர் பிறக்கவேண்டும் என்று தேவன் முன்குறித்த இடம் பெத்லகேம். இயேசுவினால் இந்த ஊர் ஒரு தகுதி பெற்றது. சகோதரனே, சகோதரியே இந்த உலகில் உனக்கு சொத்து, சுகம் என்று ஒன்றுமில்லாமல் போனாலும் நீ இயேசுவின் பிள்ளையாயிருந்தால் அதுவே மிகப்பெரிய தகுதி.

“எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிப்பதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது” (2கொரி 3:5) என்று பவுல் சொல்கிறபடியே, நம்முடைய மிகப்பெரிய தகுதி கிறிஸ்துவினாலேயே.

அமெரிக்காவின் Green Card உலகில் ஒரு தகுதி. அரசாங்க சலுகைகள் ஒரு தகுதி. இவையெல்லாவற்றையும் விட மிகப்பெரிய தகுதி கிறிஸ்தவனாயிருப்பதே. இந்தத் தகுதியைப்பற்றி உங்களுக்கு மகிழ்ச்சி இருக்கிறதா?

கிறிஸ்துவினால் உண்டான தகுதியினால் சாத்தானின் மீது உனக்கு அதிகாரமுண்டு. வியாதிகள் மீது, பிரச்சனைகள் மீது உனக்கு அதிகாரமுண்டு. நீ உலகில் அற்பமாய் இருக்கலாம். கிறிஸ்தவன் என்ற ஒரே தகுதியினால் பாதாளத்தின் வாசலை நீ மேற்கொள்வாய். இரும்புத் தாழ்ப்பாள்களை முறிப்பாய்; வெண்கலக்கதவுகளை உடைப்பாய்.

பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு, உன்னில் இயேசு வாழ்ந்தால் உன்னிலிருந்து ஜீவ அப்பமாகிய அவரது வார்த்தைகள் புறப்படும். உன்னிலிருந்து புறப்படும் கிறிஸ்துவின் வார்த்தையே செத்துக்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு ஜீவ அப்பம்.

எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம். ஆம்! கனிகொடுக்கும் பெத்லகேம். எப்பிராத்தா என்றால் கனிகொடுப்பது என்று பொருள். கிறிஸ்துவுக்குள் கனிகொடுக்கும் உயர்குலத் திராட்சைச் செடி நீ.

உலகப் பிறப்பால் உன்னைத் தாழ்ந்தவன் என்று சொல்கிறார்களா? மறுபிறப்பினால் நீ உயர்குலம். இந்தத் தகுதி கிறிஸ்துவினால், அல்லேலூயா!

கிறிஸ்துவின் வம்சத்தினால் ராகாப் வேசி எனும் இழிமொழி இழந்து, பரிசுத்தவாட்டி என்ற செம்மொழி பெற்றாள். பாவியாய் இருளடைந்த மனசாட்சியோடு தடுமாறி நின்ற நீ இயேசுவினால் ஒளி பெற்று கம்பீர நடைபோடுகிறாய்.

யூதாவிலுள்ள பெத்லகேம். யூதா என்றால் துதி என்று பொருள். ஆம்! கிறிஸ்து பிறந்ததினால் துதிகளுக்கு மத்தியில் வாழும் பெத்லகேம்! உன்னிலிருந்து துதிகள் புறப்படட்டும். யூதத்தலைவர்கள் இயேசுவைத் தள்ளிவிட்டார்கள். வேதத்தை அதிகமாக அறியாத சிறு பாலகர்கள் அவரைப் பற்றிய வெளிப்பாடு கிடைத்ததும் முழுபலத்தோடு அவரைத் துதித்தார்கள். (மத் 21:16) வேண்டாம் என்று யூத ஜனம் அவரைத் தள்ளும்பொழுது இந்தப் பாலகர்கள் அவரைத் துதிப்பது அவருக்கு எவ்வளவு ஆறுதலாய், ஆனந்தமாய் இருந்திருக்கும். “பாலகர் வாயில் உண்டான துதி நல்ல பெலனாக விளங்கி பகைவனை அடக்கிப்போடும்.” (சங் 8:2) உன் துதியினால் உண்டாகும் பலம் சாத்தானை அடக்கிப்போடும். ஆகவே ஆவிக்கேற்ற நிலையில் நீயும் யூதாவின் எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேம்.

உலகப்பிரகாரமாய் உனக்கு மிகப்பெரிய கல்வித்தகுதி இல்லையா? கிறிஸ்துவுக்குள் நீ ஞானத்தைப் பெற்றிருக்கிறாய். சரீரப் பிரகாரமாக

பலவீனமாயிருக்கிறாயா? கிறிஸ்துவுக்குள் எதனையும் செய்யும் பலமுள்ளவனாயிருக்கிறாய்.

பெத்லகேமில் இயேசு பிறந்தது சாதாரண சரித்திர சம்பவம் அல்ல, தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல். காலம் நீண்டு கொண்டே போனது, நீண்ட அமைதியான காலம் குறுக்கிட்டது. ஆனால் தீர்க்கதரிசனம் தேவன் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற பெத்லகேமில் இயேசு பிறந்தார்.

உன் வாழ்க்கையில் நாள்கள், மாதங்கள் வருடங்கள் என்று காலம் கடந்து போய்க்கொண்டு இருக்கிறதா? தேவன் பதிலே சொல்லாத அமைதிக்காலம் நீடித்துக்கொண்டே இருக்கிறதா? தேவன் குறித்த நாளிலே உனக்கு அவர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறிவிடும்.

எப்பிராத்தா என்றால் கனி கொடுப்பது என்று பொருள்; கிறிஸ்துவுக்குள் கனி கொடுக்கும் உயர்குலத் திராட்சைச் செடி நீ.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கும் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை" (யோசு 23:14) என்ற சத்தியம் உன் நினைவை விட்டு நீங்காதிருப்பதாக.

2. எல்லா சூழ்நிலைகளுக்கும் பின்னால் கடவுள்:

"அந்த நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகுஸ்துராயனால்

கட்டளை பிறந்தது.'' (லூக்கா 2:1) கொலுமண்டபங்கள் திடீர் சட்டங்களை இயற்றலாம்; கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். ஆனால் கர்த்தர் அவைகளையும் ஆளுகை செய்பவர்.

தமிழ்நாட்டில் 2002-ல் மதமாற்றத் தடைச்சட்டம் வந்தது. ஊர்வலம், கண்டனக் கூட்டங்கள், அனல் பறக்கும் தலையங்கங்கள் இப்படி ஆயிரம் இருந்தாலும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. திருச்சபை முழங்காலில் நின்றது. மதமாற்றத் தடைச்சட்டம் தானாகவே முறிந்து, மண்ணில் விழுந்தது. சூழ்நிலைகளைத் தேவன் அரசாளுகிறார்.

இயேசு பெத்லகேமில் பிறக்க வேண்டும். ஆனால் நிறைமாத கர்ப்பிணியான மரியாள் நாசரேத்தூரில் இருந்தார். இந்தக் கட்டளை முன்பாகவே அறிவிக்கப்பட்டால் மரியாள் நாசரேத்திலே இயேசுவைப் பெற்றிருக்க வேண்டிய சூழ்நிலை வரும். பிந்தி அறிவிக்கப்பட்டால் வழியிலேயே இயேசு பிறந்திருப்பார். ஆனால் தீர்க்கத்தரிசனம் நிறைவேற சரியான நேரத்தில் கர்த்தரின் சித்தப்படி அறிவிக்கப்பட்டதால் இயேசு பெத்லகேமில் பிறந்தார். அகுஸ்துராயனின் இருதயத்தைக் கர்த்தர் ஏவினார். ஆகவே குடிமதிப்பு கணக்கு தொடங்கியது.

முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்று தமிழக அரசை நோக்கி தேவன் சொன்னபடியால் மதமாற்றத் தடைச்சட்டம் மடிந்து வீழ்ந்தது. ''இராஜாவின் இருதயத்தை தமது சித்தத்தின்படி கர்த்தர் திருப்புகிறார்.'' (நீதி 21:1)

3. அவர்கள் மிகவும் பயந்தார்கள் :

"கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள்." (லூக்கா 2:9)

சந்தோஷ செய்தியின் அலைகள் அவர்களை நோக்கி வந்தவேளையில் மேய்ப்பரின் இதயங்கள் பயத்தின் கோர அலைகளால் அதிர்வுற்றன. நடுக்கம் நெஞ்சைப் பிடித்துக்கொண்டது. இந்தப் பயம் பாவமல்ல. அறியாமையின் விளைவு. அறியாமையினால் இன்று மனிதன் திகிலடைகிறான். கடவுளைப் பற்றிய அறிவின்மையால், இருளைக்கண்டு சிறுபிள்ளைகள் பயப்படுவதுபோல மனிதனும் கடவுளைப்பற்றி பயப்படுகிறான்.

உன் துதியினால் உண்டாகும் பலம் சாத்தானை அடக்கிப்போடும். ஆகவே ஆவிக்கேற்ற நிலையில் நீயும் யூதாவின் எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேம்.

இருளில் பூச்சாண்டி என்று குழந்தைகள் அஞ்சுவதுபோல் மனிதனும் பயத்தால் இடியோசை, பொங்கிவரும் வெள்ளம், பட்சிக்கும் அக்கினி, படமெடுக்கும் பாம்பு இவைகளையெல்லாம் தெய்வம் என்று வணங்க ஆரம்பிக்கிறான். வேல், வாள், வெட்டரிவாள், கத்தி இவைகளோடு தெய்வம் நிற்பதாகக் கடவுளைப்பற்றிய பயத்தினால், இந்தப் பயங்கர உருவங்களில் உருவமில்லா கடவுளைப் படைத்து, விழுந்து வணங்குகிறான். விசுவாசம் சத்திய

தேவனையும், பயம் பொய்த் தோற்றங்களையும் வணங்கும்படி செய்கிறது.

பெத்லகேமில் பயந்த மேய்ப்பர்களை, பயப்படாதிருங்கள் என்று தேவதூதர்கள் தேற்றினார்கள். ஆகவே முதலில் உன் பயத்திலிருந்து நீ விடுதலை பெறவேண்டும். பயத்தினால் புற்றுநோய் வர வாய்ப்பு உண்டு என்று உளவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். என்ன பயப்படுகிறீர்களா?

பயம் இருதயத்தை ஆளுகை செய்தால், விசுவாசம் இதய வீட்டின் வாசற்படியினைத்தாண்டி வெளியே சென்றுவிடும். நீயாக அழைக்காவிடில் அது மீண்டும் வாசற்படியில் நின்று இதயக்கதவைத் தட்டாது.

சீஷர்கள் கொந்தளிக்கும் கடலில் பயத்தினால் அலறி இயேசுவையே ஆவேசம், பிசாசு என்று எண்ணிவிட்டார்கள். (மத். 24:16) மிஞ்சின பயத்தால் சிலர் பிசாசைக் கடவுள் என்று நம்பி விடுகின்றனர். எத்தனையோ மூடநம்பிக்கைகளை பயத்தினால் மனிதன் தெய்வ நம்பிக்கைகளாக மாற்றிவிட்டான்.

வீட்டில் கண்ணாடி உடைந்தால் சாவு ஏற்படும் என்று பயப்படுகின்றனர். கண்ணாடி கடைகளில், தொழிற்சாலைகளில் எவ்வளவு கண்ணாடிகள் உடைகின்றன! திடீரென்று விளக்கு அணைந்துவிட்டால் அபசகுணம் என்கிறார்கள். கோடை காலத்தில் விளக்குகள் அடிக்கடி அணைகின்றன. (power cut) ஆனால் குளிர்காலத்தில்தான் சாவுகள் அதிகமாயிருக்கின்றன. மனிதனின் பயத்தில் 90

சதவீதம் பொய்யான பயங்கள் என்று ஆராய்ச்சியாளர் சொல்கின்றனர்.

மேய்ப்பர்கள் பெத்லகேமில் பயந்தார்கள். விபரம் புரியாமல், நீயோ பயப்படாதிரு.

4. அற்பமான மனிதர்களுக்கு அற்புத செய்தி:

“தேவதூதன் மேய்ப்பர்களை நோக்கி... மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்... என்றான்.” (லூக்கா 2:10) முக்கியமான செய்தி, முக்கியமான மனிதரால் அறிவிக்கப்படுவதுதான் வழக்கம். அதுவும் முக்கியமானவர்களுக்கே முதலில் அறிவிப்பார்கள்.

நமது பாரதப்பிரதமர் திருமதி. இந்திர காந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்ட செய்தியை உலகின் மற்ற நாடுகளுக்கு அறிவித்தபின்தான் இந்தியா தன் நாட்டிற்கு அறிவித்தது, ஏன்? நாட்டிற்கு முக்கிய செய்தியைப் பிரதமர் அல்லது ஜனாதிபதி தான் அறிவிக்க வேண்டும். இப்பொழுது பிரதம மந்திரியே இறந்து விட்டார். அதை அறிவிக்க வேண்டிய ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தார். அவர் இந்தியா திரும்பிய பின்தான் அந்தச்செய்தி அறிவிக்கப்பட்டது.

உலகின் மிகப்பெரிய செய்தியான கடவுள் மனுஉருவில் குழந்தையாகத் தோன்றிய செய்தி முதலாவது ஆசாரியர்களுக்கோ, வேதபாரகர்களுக்கோ அறிவிக்கப்படவில்லை. இந்தச் செய்தி சாதாரண மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எப்பொழுதும்

விழிப்போடு இருங்கள். திடீரென்று பரலோகம் FLASH NEWS என்று அறிவிக்கும். உங்கள் இதயத்திரையில் ஆவியானவர் பரலோகச் செய்தியை ஒளிபரப்புவார் ஆகவே விழித்திருங்கள்.

இரண்டாம் உலகப்போரின் சமயத்தில் இங்கிலாந்தில் யுத்த செய்தியை மேகங்களுக்கிடையில் எழுத்து வடிவங்களில் ஒளி பரப்பிவந்தனர். யுத்தத்தில் ஜெர்மானியர் ஜெயித்து விடுவார்களோ என்று இங்கிலாந்து மக்கள் அஞ்சி ஆவலோடு வானத்தில் தோன்றும் செய்திக்காகக் காத்திருந்தனர். மேகங்களுக்கிடையில் எழுத்துக்கள் தோன்றத் தொடங்கின. திக்திக் என்று இதயம் அடித்துக்கொள்ள மக்கள் செய்தியை வாசிக்கத்தொடங்கினர்.

“இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து தோல்வி...” என்று எழுத்துக்கள் தோன்றியவுடன், கை கால்கள் நடுங்கின. கண்ணீர் பெருகி ஓடியது. திடீரென்று மேகங்கள் விலக மேற்கொண்டும் எழுத்துக்கள் தோன்றி. “இரண்டாம் உலகப்போரில் ... இங்கிலாந்து தோல்வியடையச் செய்தது ஜெர்மனியை” என்று வெற்றிச்செய்தி பளிச்சென்று தெரிந்தது. (ENGLAND DEFEATED GERMANY)

ஆகவே செய்தியை முழுமையாகப் பெற ஜாக்கிரதையாய் இருங்கள். ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதற்கு முழு கவனம் செலுத்துங்கள். “செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து இயேசுவைக் கண்டார்கள்.” (லூக்கா 2:16) செய்தி அவர்களைத் துரிதப்படுத்தியது!

சகோதரனே, சகோதரியே, தேவனது செய்திகள் உன்னைத் துரிதப்படுத்துகின்றனவா? தேவதூதர்கள் சொன்ன செய்தியை அவர்கள் தேவனது செய்தி என்று நம்பினார்கள்.

தேவன் உன்னோடு பேசுவதை நீ நம்புகிறாயா? சபையில் போதகர் பேசும்பொழுது கர்த்தர் உன்னோடு பேசுகிறார் என்பதை விசுவாசிக்கிறாயா? சில விசுவாசிகள் ஆராதனை முடிந்தவுடன் போதகரிடம் போய், ‘‘பாஸ்டர் நீங்கள் பேசியது எனக்கு பேசியதுபோல இருந்தது’’ என்று சொல்வார்கள். அவர்களுக்குப் பேசாமல் போதகர் தூணுக்கும் துரும்பிற்குமா பேசினார்?

இன்னும் சிலர், ‘‘பாஸ்டர்! இன்று செய்தி சூப்பர்! என் பக்கத்திலிருந்தவர் பிரசங்க நேரம் முழுவதும் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டிருந்தார். பாஸ்டர் பிரசங்கம் சரியான சவுக்கடி.....’’ உடனே போதகர் சொல்வார், ‘‘அவனுக்கு நல்ல மனசாட்சியும் உணர்வும் இருந்ததினால் அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்திருந்தான். உணர்ச்சியற்ற சிலர் பிரசங்கம் தனக்கு அல்ல என்றிருப்பர்.’’

சகோதரனே, சகோதரியே, தேவ செய்தி உண்மையென்றும் அது உனக்காகவென்றும் எடுத்துக்கொள்கிறாயா? வாக்குத்தத்தத்தை மட்டும் உங்களுக்கு எடுத்துக்கொண்டு எச்சரிப்பின் சத்தத்தை தனக்கு அல்ல என்று எடுக்கும் குணம் உங்களுக்குத் தூரமாயிருப்பதாக.

ஒரு பெரியவர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்தார். அவருடைய மகன் அவர் அருகே இருந்து அவரைக் கவனித்து வந்தார். ஒருநாள் ஒருவர் நோயாளியான அப்பெரியவரைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தார். அவர் பெரியவரின் மகனைப் பார்த்து, "தம்பி, அப்பா எனக்கு 1000 ரூபாய் தரவேண்டும். அதை இப்பொழுது கொடுத்தால் நலமாயிருக்கும்" என்றார்.

உடனே மகன் அப்பாவிடம் அதுபற்றி விசாரித்தார். உடனே பெரியவர் மிகவும் சிரமப்பட்டு "ப்பே... ப்பே.. பா.. பா.." என்று சொன்னார். பெரியவரால் பேசக்கூட முடியவில்லையே என்று வந்தவர் போய்விட்டார். இப்படியே சிலர் வந்து போனார்கள். எல்லோருக்கும் பெரியவரின் பதில் "ப்பே..ப்பே..பா..பா" என்பதுதான்.

ஒருநாள் ஒரு வியாபாரி மருத்துவமனைக்கு வந்தார். வந்தவர், "தம்பி, அப்பாவிற்கு நான் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும். எவ்வளவு என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் பெரியவர் தன் வாயை அகலத்திறந்து, "என்ன எவ்வளவு பணமென்று தெரியவில்லையா? ஐயாயிரம் ருபாய்" என்று சத்தமிட்டுச் சொன்னார்.

விசுவாசிகள் பலரும் இந்தப் பெரியவரைப் போல பொருத்தனைக் காணிக்கை, எச்சரிக்கை என்றால் வாயை மூடிக்கொள்வதும், வாக்குத்தத்தம், ஆசீர்வாதம் என்றால் வாயை விரிவாய்த் திறப்பதும் வாடிக்கைதானே.

அவர்களை 'குதிரை விசுவாசிகள்' என்று அழைக்கலாம். ஏனெனில் புல் என்றால் வாயைத்திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளதுவும் குதிரைதானே.

ஆனால் இந்த மேய்ப்பர்களோ, இரட்சகர் உங்களுக்கு இன்று பிறந்திருக்கிறார் என்பதை தங்களுக்கென்றே எடுத்துக்கொண்டனர். இரட்சகர், அதாவது தங்களை விடுவிக்கப்போகிறவர் மாடமாளிகையிலோ கூடகோபுரத்திலோ பிறப்பார் என்று அவர்கள் எண்ணாமல் பிள்ளையைத் துணிகளில் சுற்றியிருப்பார்கள் என்ற அடையாளம் காட்டியவுடன் அந்த ஏழ்மைக்கோலத்தை அலட்சியம் செய்யவில்லை, உடனே இயேசுவைக் காணப் புறப்பட்டனர்.

தங்களைச் சந்திக்க தேவதூதர்கள் வந்தார்களே என்று அவர்கள் மகிழ்ந்தார்கள். இன்று எழுத்தின்படி தேவதூதர்கள் வராமலிருக்கலாம். ஆனால் உன்னை நோக்கி வரும் தேவதூதர்களுக்காக மகிழ்ச்சியடைகிறீர்களா? அவர்கள் பரலோகத்தின் பாட்டிலே அப்படியே பரவசப்பட்டுப் போய்விடவில்லை. தேவதூதர்களைக் கண்ட காட்சியிலே தங்களை மறந்துவிடவில்லை. உடனே செயற்பட்டார்கள், இயேசுவைக் கண்டார்கள்; அவரை உடனே பிரசித்தம் பண்ணினார்கள். (லூக்கா 2:17)

ஆராதனையில் மெய்மறந்து இருப்பது உன் அழைப்பு அல்ல. பிரசங்கத்தை குறிப்பேடுகளில் எழுதி

எழுதி குவிப்பதல்ல உன் அழைப்பு. இயேசுவைப் பிரசித்தம்பண்ணு.

அவர்கள் மந்தையை விட்டுவிட்டு வந்தார்கள். அதுவும் நள்ளிரவில் குளிரில் வந்தார்கள். நீ இயேசுவுக்காக எதை விட்டாய்? அவரைக் காண, பிரசித்தம்பண்ண நீ பட்ட பாடுகள் என்ன? இரவில் வீட்டிற்குத் திருடன் வந்துவிடுவான் என்று நள்ளிரவு ஆராதனைக்குப் போகாமல் வீட்டைக் காவல் காக்கும் விசுவாசியே கொஞ்சம் யோசி, சங்கீதம் 127:2-ஐ வாசி!

பெத்லகேம் சென்றுவந்த மேய்ப்பர்கள் திரும்பக்கொண்டு வந்தது இரட்சிப்பின் செய்தியை. நீ உலகிற்கு என்ன கொண்டு போகிறாய்?

5. பெத்லகேமில் கிழக்கு நாட்டு ஞானிகள் :

பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது கிழக்கிலுமிருந்து சாஸ்திரிகள் எருசலேமை நோக்கி நடந்தனர். (மத் 2:1) ஞானிகள் என்றாலும் வானசாஸ்திரம் அறிந்தாலும் அவர்கள் வானத்தை உண்டாக்கின தேவனுக்குத் தூரமானவர்கள். இப்பொழுது ஒரு இராஜாவின் பிறப்பு தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடியால் அந்த இராஜாவை அறிந்துக்கொள்ளப் புறப்பட்டனர்.

தேவனைப்பற்றி, இயேசுவைப்பற்றி தெளிவான வெளிப்பாடு அவர்களுக்கு இல்லை. ஆனாலும் ஒரு மேசியா வருவார் என்ற பரவலான கருத்து அன்று நிலவியது. அந்த மங்கிய வெளிப்பாட்டில் அவர்கள் மேசியவைத்தேடி நீண்ட பிரயாணம் செய்தனர்.

சகோதரனே, சகோதரியே, திட்டமான வெளிப்பாடுகளைப் பெற்ற நீ எப்படி இருக்கிறாய்? மத்திய வானில் இயேசு நினையாத வேளையில் வருவார் என்பதை நினைவில் வைத்து வாழ்கிறாயா? மேசியாவை அவர்கள் அன்னியக் கடவுள் என்று எண்ணவில்லை

கடவுளுக்கு அன்னிய நாடு, உள் நாடு என்று தேசியம் கற்பிக்கிறவன் அஞ்ஞானிதானே. பல நூறுகல் தொலைவு நடந்து இரட்சகரைக் காணப்புறப்பட்ட அவர்கள் எவ்வளவு தரிசனம் பெற்றவர்கள்? வேதத்தின் மகத்துவங்களை எழுத்துவடியில் பெற்ற இன்றைய கிறிஸ்தவர்கள் அவைகளை அந்நிய காரியமாக எண்ணுகிறார்கள். (ஓசியா 8:12)

பல மாதங்களாக காடு, மேடு, மலை, ஆறு வாவிகள் என்று கடந்து, நடந்து இரட்சகரைக் காண வந்தார்களே. தூர இடத்தில் ஆலயம் இருக்கிறது என்று ஆராதனைக்குச் செல்லாமல் கர்த்தரின் நாளில் எத்தனை முறை விசுவாசிகள் முடங்கிக் கிடக்கிறார்கள்? இரட்சகரைக் கண்ட நீ ஊழியத்திற்காக நடந்தது உண்டா? இரட்சிப்பைப் பிரசித்தம் பண்ணி நாடு, நகரங்களில் நடக்கும் கர்த்தரின் பிள்ளைகளின் பாதங்கள் அழகாகயிருக்கின்றன என்று வேதம் சொல்கிறதே. உங்கள் பாதங்கள் எப்படி இருக்கின்றன? ஞானிகளின் அழகான பாதங்கள் இயேசுவை நோக்கி நடந்தன.

எழுதப்பட்ட வேதம் அவர்கள் கையில் இல்லை. ஆனாலும் அவர்களின் மனசாட்சியில் தெய்வீக

வெளிப்பாடு என்ற வெளிச்சம் இருந்தது. கர்த்தரின் கட்டளைகள் எல்லாருடைய மனசாட்சியிலும் எழுதப்பட்டிருந்தன. ஆனால் எப்பொழுதுமே மனசாட்சி வேதவார்த்தையைப் போல சரியான வழிகாட்டியாய் இருக்காது. ஆனாலும் அவர்களது மனசாட்சியில் எழுதப்பட்ட செய்தி அவர்களைப் பெத்லகேமிற்கு இழுத்தது. உன்னை எது இழுக்கிறது?

6. ஞானிகள் கண்ட நட்சித்திரம் : (மத் 2:2)

வானத்தில் கோடி நட்சத்திரங்கள், ஆனாலும் அவைகளில் ஒன்று இயேசுவின் நட்சத்திரம். அதைக்கண்டு கொண்டதால் அவர்கள் ஞானி. எத்தனையோ நம்பிக்கைகள், அவைகளில் இயேசுவை நம்புவது ஞானம். எத்தனையோ நல்வார்த்தைகள், அவைகளில் தேவனது வார்த்தை ஞானம்.

நட்சத்திரத்தைக் கண்ட அவர்கள் இயேசுவிற்கு ஜாதகம் பார்க்க உட்கார்ந்த புரோகிதர் கூட்டமல்ல. அந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்தார்கள். கர்த்தரின் வார்த்தையைப் பின்தொடர்கிறீர்களா அல்லது தேவ ஜனங்கள்போல் சபை நடுவே உட்கார்ந்து போதகரின் குரல் இனிமையானது, சூப்பர் பிரசங்கம் என்று அவரில் மகிழ்ந்துக் கொண்டிருக்கிறீர்களா?

அவருடைய நட்சத்திரம் அவர்களை வழி நடத்திற்று. இன்று அவருடைய வார்த்தை உங்களை நடத்துகிறதா? அவருடைய வழியில் நடக்கிறீர்களா? அவருடைய சத்தத்தைத் தெளிவாய்க் கேட்கிறீர்களா? அவருடைய சிந்தையைப் பற்றிக் கொள்கிறீர்களா?

கண் திறக்கப்பட்டவன் என்று தன்னை அறிமுகப்படுத்தி யாக்கோபில் ஒரு நட்சத்திரம் உதிக்கும் அவரை ஒருநாள் தரிசிப்பேன் என்ற பிலேயாம், துன்மார்க்கத்தில் கண்களை மூடிவிட்டது நமக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். (எண் 24:17)

7. அவர்களது தவறு :

எருசலேம் அருகே வந்தவுடன் நட்சத்திரத்தை மறந்து நகரத்துக்குள் ஞானிகள் நுழைந்தனர். இராஜா என்றால் அவர் தலைநகரத்தில்தான் பிறந்திருப்பார் என்ற மூளை அறிவினால் எருசேமிற்குள் சென்று யூதருக்கு ராஜாவாகப் பிறந்தவர் எங்கே என்று விசாரித்தனர். சிறுகுழந்தைகள் ஏரோதின் பட்டயத்திற்குப் பலியாயினர். ஞானிகள் செய்த தவறினால் விளைந்த பலன் இது. ஏனெனில் ஞானிகளின் மதிகெட்ட செயலினால்தான் ஏரோது கொடிய கட்டளையைப் பிறப்பித்தான்.

கர்த்தரின் பாதையில் நடக்கும் நீ, பாதைமாறி நடந்தால் உன்னைக் காண்பவர்கள் இடறுவார்கள். நீ செய்யும் தவறு அனேகரைப் பாதிக்கும். ஆகவே ஆவியானவர் காட்டும் பாதையில் நட. நட்சத்திரப் பாதையைத் தவறவிட்டதால் எவ்வளவு கஷ்டம், நஷ்டம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும்.

“நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன்” (அப் 27:10) என்ற பவுலின் வார்த்தைகளை விட மாலுமியின் வார்த்தைகளை நம்பிய பிரயாணிகள் தப்பிப் பிழைக்க முடியாத ஆபத்தில்

சிக்கிக்கொண்டதுபோல நீங்களும் கர்த்தரின் நடத்துதலை விட்டுவிடாதீர்கள்.

8. அலட்சியமான நகரம் (மத் 2:3)

இரட்சகரின், இராஜாவின் பிறப்பை அறிந்து எருசேலேம் கலங்கியது. மேசியா பிறந்திருக்கிறார், ஒரு ராஜா தோன்றியிருக்கிறார் என்று வேதமறியா கிழக்கு நாட்டு ஞானிகள் கேள்விப்பட்டதும் எத்தனை ஆர்வமுடன் நடந்தார்கள். ஆனால் வேதம் அறிந்த எருசலேம் அலட்சியமாக இருந்தது.

எருசலேம் இராஜாவின் பிறப்பினால் கொண்டாட்டத்தில் திளைத்திருக்கும், வீதியெல்லாம் குருத்தோலை அலங்காரங்கள் இருக்கும் என்றெண்ணி அந்த ஞானிகள் வந்திருக்கக்கூடும். ஆனால் எருசலேமோ, அலட்சியமாய் இருக்கிறது. வேதத்தின் தீர்க்கதரிசனத்தை தெரியும்; ஆவியானவரின் வெளிப்பாட்டை எருசலேம் அறியும், ஆனாலும் வேதசத்தியத்திற்கு எருசலேம் அலட்சியமாக இருந்தது.

வேதபாரகர்களுக்கு வேதஞானம் இருந்தது. ஆனால் ஆவிக்குரிய வெளிப்பாடு இல்லை. இன்று கிறிஸ்தவ உலகமும் அலட்சியமாக இருக்கிறது. சபையை எடுத்துக்கொண்டுபோக இயேசு மத்திய வானில் வருகிறார் என்று அறிந்திருந்தும் அவருடைய வருகைக்காக சபைகள் ஆயத்தமாகவில்லையே!

பெயர் சபைகள் சண்டையிலும் வீண் தர்க்கங்களிலும் நேரத்தைப் போக்கடிக்கின்றன. யூதருக்கு ராஜா பிறந்த செய்தியால் எருசலேம்

கலங்கிற்றே. இந்தச் சபைகளுக்கு அந்தக் கலக்கம் கூட இல்லையே. அழிந்துபோகிற ஆத்துமாவைப் பற்றிய பாரமும் இல்லை; பாசமும் இல்லையே! நீரும் ஒரு அலட்சிய நகரமாக இருக்கிறீரா?

9. நட்சத்திரம் நின்றது :

இயேசு இருந்த விட்டின்மேல் நட்சத்திரம் நின்றது. அதற்கு மேல் வழியும் இல்லை. வழி நடத்துதலும் தேவையில்லை. இயேசுவைக் கண்ட பின்பு இரட்சிப்புக்கு மேற்கொண்டு நடக்க வேண்டாம். இரட்சிப்பில் நீண்ட தூரம் நீ நடக்க வேண்டும். ஆனால் இனி இரட்சிப்பிற்காக நீ நடக்க வேண்டாம்.

10. வீட்டிற்குள் நுழைந்தார்கள்: (மத் 2:11)

கடைசியில் ஞானிகள் இயேசு இருந்த இடத்திற்கு வந்து சிறுபாலகனாக அவர் இருந்தபோதிலும் தாங்கள் பெற்ற வெளிப்பாட்டினால் அவர்கள் இயேசுவைத் தொழுதுகொண்டனர்.

ஞானம், வார்த்தையான கிறிஸ்துவைத் தொழுதது! ஞானிகள் மட்டுமே பெத்லகேமிற்குச் சென்றார்கள், வேதம் படித்தோர், சத்தியம் தெரிந்தோர் பாரம்பரியத்தில் சுருண்டுவிட்டனர்.

ஞானிகள் பெத்லகேமில் இயேசுவோடு, உலக ஞானிகள் இயேசு இல்லா உலகத்தோடு. அவர்களது தொழுகை உலகிற்கு இயேசுவை வெளிப்படுத்தியது அவர்கள் அர்ப்பணித்தவைகள் வெள்ளைப்போளம், தூபவர்க்கம், பொன்.

தூபவர்க்கம் : இயேசுவைத் தொழுதுகொள்ள வேண்டுமென்று காட்டியது. ஆகையால் கர்த்தர் என்று வெளிப்படுத்தியது.

வெள்ளைப்போளம் : மரித்த சரீரங்களைப் பாதுகாக்கப் பயன்படுகிறது. ஆகையால் பலியான இரட்சகராகிய இயேசுவை வெள்ளைப்போளம் காட்டுகிறது.

பொன் : இராஜரீகத்தைக் குறிக்கிறது. ஆகையால் இயேசு வரப்போகிற இராஜா, கிறிஸ்து என்று அறிவிக்கிறது.

ஆகவே பெத்லகேமின் ஞானிகள் இயேசுவோடு இருக்கும்பொழுது உலகிற்கு அவர்களது தொழுகையும் அர்ப்பணிப்பும் வெளிப்படுத்தின சத்தியம் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

உங்கள் தொழுகையும் அர்ப்பணிப்பும் இயேசுவை சிங்காசனத்தில் வீற்றிருக்கும் மாபெரும் மன்னனாகக் காட்டுகிறதா?

யோர்தானில் இயேசுவோடு

யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் பெற, பல கல்தொலைவு நடந்து வந்திருக்கிறார். யோர்தானில் நிற்கும் இயேசு நமக்குப் பல பாடங்களைத் கற்றுக் கொடுக்கிறார். அவைகளை நாம் ஆர்வமுடன் அறிந்துக்கொள்ள முயல்வோம்.

1. எல்லா நீதியையும் நிறைவேற்ற : (மத் 3:15)

இயேசு ஞானஸ்நானம் எடுத்தது, நமக்கு முன் மாதிரிக்காக அல்ல. நமக்கு ஞானஸ்நானம் அவசியமாயிருக்கிறதுபோல இயேசு கிறிஸ்துவுக்கு அது அவசியமில்லை. ஞானஸ்நானம் எடுப்பவர்கள் பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழ வேண்டும். இந்த அனுபவம் இயேசுவுக்கு அவசியமில்லை; அவரிடம் இந்த அனுபவம் இருக்கவுமில்லை. பிறகு ஏன் அவர் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும்? ஏன் எடுத்தார்?

ஞானஸ்நானம் என்பது மரணம், உயிர்த்தெழுதல் என்ற அடிப்படையில் உள்ளது. அதாவது ஒருவன் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்திருப்பதே அந்த அனுபவம். பாவமேயில்லாத இயேசு கிறிஸ்து, தன்னிடம் இல்லாத பாவத்திற்கு மரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைப்பதே தேவனது நீதி.

அப்படியாயின், அவர் எப்படி தேவநீதியை நிறைவேற்றினார்?

இயேசுவினிடத்தில் பாவமில்லாவிட்டாலும் சுயசித்தமுண்டு. இந்த சுயசித்தம் பரிசுத்த சித்தமாக இருந்தபோதிலும், இந்த சுயசித்தத்திற்கு அவர் மரித்து பிதாவின் சித்தத்திற்கே பிழைத்தார். ‘‘ஆயினும் என் சித்தமல்ல, உம் சித்தமே’’ என்று கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்து சிலுவையில் தேவநீதியைப் பரிபூரணமாய் முடித்தார். இந்த தேவநீதியின் துவக்கமே இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம்.

நம்முடைய சுய முயற்சியினால் கிறிஸ்துவின் வாழ்க்கையை நம்மால் வாழமுடியாது. பின்பற்றுவதற்கு பத்து கட்டளைகளைவிட இயேசுவின் வாழ்க்கை கடினமானது. நியாயப்பிரமாணத்தின்படி வாழமுடியாத மனிதன் கிறிஸ்துவின் வாழ்க்கையையும் பின்பற்ற முடியாது. அப்படியாயின் கிறிஸ்துவினாலே நாம் எப்படி தேவநீதியை நிறைவேற்றுகிறோம்?

யோர்தான் நதி தொடங்கி கல்வாரி வரையிலுமான கிறிஸ்துவின் மானிட வாழ்க்கையே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல். இந்த நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாகிய தேவநீதியை விசுவாசிகளாகிய நாம் ஞானஸ்நானத்தினாலே பெற்றுக்கொள்கிறோம். அதாவது ஞானஸ்நானத்தில் முதலாவது அவரது மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டு, பின்பு அவரது உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படுகிறோம். இதனால் அவருடைய ஜீவனை நாம் நமக்குள் பெற்றுக்கொள்கிறோம்.

உலகப்பிரகாரமாக தன் தகப்பனாகிய யோசேப்பின் தச்சுப்பட்டறையில் இயேசு வேலை செய்தார். தச்சுவேலை செய்வது பாவமல்ல என்றாலும் இந்த வாழ்க்கைக்கு மரித்து தன் பரம தகப்பனின் பணியில் இருப்பதையே அவர் விரும்பினார். ஞானஸ்நானம் எடுத்த நாமும் உலகத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்க வேண்டும். இதைத்தான் இயேசு யோர்தானில் தன் ஞானஸ்நானத்தின் மூலம் கற்றுத்தருகிறார். இதுதான் தேவநீதி.

ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டவர்கள் அல்ல. ஆகவே அவர்கள் கிறிஸ்துவோடு எழுந்தவர்களும் அல்ல. மரணம், உயிர்த்தெழுதல் என்ற அடிப்படையில் ஞானஸ்நானம் பெறாதவர்கள், விக்கிரக ஆராதனை செய்கிறார்கள், சடங்காச்சாரம் செய்கிறார்கள். மனந்திரும்ப அவசியமில்லாத குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பது விக்கிரக ஆராதனை; சடங்காச்சாரம். அப்படியே மனந்திரும்பாத பெரியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் சடங்காச்சாரமே.

2. அறியாமையினால் யோவான் தடை செய்தான்:

ஞானஸ்நானம் பெற வந்த இயேசுவை யோவான் தடை செய்தான். கடவுள் தந்த தகுதியை அறியாததினாலே யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தடை பண்ணினான். நல்ல எண்ணத்தினாலே இதைச் செய்தபோதிலும் தேவசித்தத்திற்கு மாறாகவே அவன் செயலிருந்தது.

நம்முடைய சிந்தனையின்படி அனேக காரியங்கள் நன்மையாகக் காணப்பட்டாலும் தேவனது பார்வையில் அவை தவறாகவே காணப்படும்.

யோவான் சீக்கிரம் தன் அறியாமையினின்று விடுபட்டான். சகோதரனே, சகோதரியே! உன் அறியாமையின் காலத்தில் தேவன் காணாதவர் போலிருந்தது உனக்கு ஆவிக்குரிய பாதுகாப்பல்ல. ‘இப்பொழுது இடங்கொடு’ என்று யோவானுக்குச் சொன்ன கர்த்தர், இப்பொழுதே எல்லா மனுஷரும் மனந்திரும்ப வேண்டும் என்று கட்டளையிடுகிறார். உன் அறியாமையில் அடைக்கலம் தேடிக் கொண்டிராமல் சத்தியத்தைத் தேடு. அது உன்னை விடுதலையாக்கும். அறியாமை இதயத்தை ஆளும்போது போலியான நீதி இதயக் கொலுமண்டபத்தில் அமர்ந்திருக்கும்.

இயேசுவே இரட்சகர் என்று அறியாத பவுல் இதயத்தில், அறியாமை ஆளுகை செய்தபடியால் சபையைப் பாழாக்குவதை அவர் நீதி என்று எண்ணினார். திடீரென்று ஒருநாள் பரலோகத்தின் ஒளி அவர் ஆத்துமாவில் வீசவே, அந்த அறியாமை இருள் அகன்றது. கிறிஸ்தவர்களைச் சிறைபிடித்த அவர், கிறிஸ்துவுக்காய்ச் சிறைபட்டார். எத்தனையோ படித்தும், கற்றும் வல்லுனராய் விளங்கிய பவுல் கிறிஸ்துவைப்பற்றி அறியாமையின் காலத்தில் வாழ்ந்ததால் தன்னைப் பாவிகளில் பிரதான பாவியென்று அழைத்தார். சகோதரனே! சகோதரியே, உன் அறியாமையில் தொடர்ந்து நடக்காதே.

இயேசுவின் உயிர்த்தெழும் வல்லமையை அறியாத பேதுரு, “இயேசுவை நான் அறியேன்” என்று தன் அறியாமையை அறிக்கையிட்டு அவரைச் சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். ஆனால் அறியாமை நீங்கினவுடனே அதே பேதுரு தான் மறுதலித்த இயேசுவையே ஆண்டவரும் கிறிஸ்துவும் என்று அறிக்கையிட்டான்; பிரசங்கம் பண்ணினான்.

ஆகவே அறியாமை உனக்குப் பாதுகாப்பல்ல. சீக்கிரமாய் அதைவிட்டு வெளியேறு. முழுக்கு ஞானஸ்நானம் எனக்குத் தெரியாது... பரிசுத்த ஆவியின் அபிஷேகமா? எனக்குத் தெரியாது... அன்னிய பாஷையா? எனக்குத் தெரியாது... என்று உன் அறியாமையை பறைசாற்றிக் கொண்டிராதே.

அறியாமை உனக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் ஆபத்தை உருவாக்கிவிடும். எலிசாவின் சீடரான ஒருவன் மடிநிறைய பேய் கொம்மட்டிக்காயை அறியாமையால் அரிந்து வந்ததுபோல் பல கூட்டங்களுக்கும் சபைகளுக்கும் அலைந்து திரிந்து பேயின் உபதேசங்களை கடவுளது வார்த்தைகள் என்று எண்ணி வாரிக்கொண்டு வந்து சபையில் கொட்டிவிடாதே.

3. வானம் திறந்தது (மத் 3:16)

யோர்தான் ஆற்றில் பாவிகள் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். அந்தக் கூட்டத்தின் மத்தியில் ஞானஸ்நானம் பெற இயேசுவும் நிற்கிறார். இயேசுவையும் பாவியான மனிதர்தான் என்று பலர்

எண்ணியிருக்கக்கூடும். இப்படி மக்கள் தன்னைத் தவறாகப் புரிந்துக்கொள்வார்களே என்று இயேசு கவலைப்படவில்லை.

அருமையான தேவபிள்ளையே, ஆவிக்குரிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நீ ஆயத்தமாகும் பொழுது, உலகம் உன்னைத் தவறாகப் புரிந்துகொள்ளலாம். அதனால் உன்னைத் தாழ்ந்த சாதி என்று சிலர் முத்திரையிடலாம். நீயோ பரிசுத்த சாதியில் இணைந்துவிட்டாய் என்று நம்பிக்கை பெறு.

இயேசுவையும் ஒரு பாவி என்று உலகம் எண்ணிய வேளையில் வானம் திறந்தது. உடனே ஒரு சத்தம் பிறந்தது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று அது உரைத்தது. (மத்3:17) இயேசு பாவி அல்ல என்று பரலோகம் வானத்தைக் கிழித்துக் கூறியது. உன்னையும் பலர் தவறாக எடைபோட்டால், உன் மீது வீண்குற்றம் சாட்டினால் இயேசு உனக்காகப்பேசி உன் நியாயத்தை விளங்கப்பண்ணுவார்.

ஊழியத்திற்காக உன் நேரத்தை, பணத்தை நீ செலவிட்டால் உன்னை உன் வீட்டார் குற்றப்படுத்துகிறார்களா? இயேசுவின் தலையில் நளதம் என்னும் வாசனைத் தைலத்தை ஊற்றிய அந்தப் பெண்ணைச் சீஷர்கள் குற்றப்படுத்தினார்கள். உடனே இயேசு, "அவளை விட்டுவிடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவு செய்கிறீர்கள்" என்று இடைமறித்து (அவள்) என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள் என்று அவளது செயலுக்கு நியாயம்

கற்பித்தார். உன் வாழ்க்கையிலும் இயேசு நியாயத்தை விளங்கப்பண்ணுவார். (மத் 3:6)

ஐயோ! என்னை எல்லோரும் தவறாகப் புரிந்துக்கொள்கிறார்களே என்று புலம்பாதே. நீ உத்தமமாய் நடந்தால் நாளானது அதை விளங்கப்பண்ணும். எகிப்திற்குள் நுழையும்பொழுது யோசேப்பு அடிமை! போத்திபார் வீட்டில் வீண் பழி! அடுத்த நாளிலிருந்து எகிப்து சிறையில் கைதி! தேவன் அவன் வாழ்க்கையில் தலையிட்டதால் பார்வோனின் அரண்மனையில் யோசேப்பை, "தேவஆவியைப் பெற்ற மனிதன்" என்று கர்த்தர் விளங்கப்பண்ணினார். உன் வாழ்க்கையிலும் தேவன் தலையிடுவார்.

வானம் திறந்தபடியால் இயேசுவும் உற்சாகமடைந்தார். தனக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தைக் காணவும் அதன் பொருட்டு அவமானத்தைச் சகிக்கவும் அவர் ஆயத்தமானார். (எபி. 12:2)

இயேசு பாவிகளுக்குப் பிரதிநிதியாக யோர்தான் நதிக்கரையில் நிற்கும்பொழுது வானம் திறந்தது. நாம் இயேசுவிற்காக நிற்கும்பொழுது நமக்காகவும் வானம் திறக்கும். ஆகவே வானம் திறக்கப்படக் காரணரான இயேசுவின் சிங்காசனத்தின் முன் தைரியமாய் நிற்போம். (எபி 4:16) அப்படி நிற்க விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி

நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி 12:2)

பரலோகம் உன்னோடு பேசாவிட்டால் நீ திக்கற்றவன். நான்கு திசைகளும் உனக்குப் புரியாத வழிகளாயிருந்தாலும் உனக்கு வானம் திறக்கப்பட்டால் உன் வழி இராஜ வீதி. தைரியமாய் நட.

இதயச் சுமையுடன், இருண்ட எதிர்காலத்தை எண்ணி, பாசமிகு அம்மாவை விட்டுப் பிரிந்து திக்கற்றவனாய், ஒரு பாறங்கல்லின் மேல், பாரமுள்ள ஆத்துமாவோடு படுத்து விட்டான் யாக்கோபு! அவனுக்காக வானம் திறந்தது! கடவுள் அவனுக்கு ஒரு காட்சியைக் காட்டினார். "பரலோகத்தின் ஏணியில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்." (ஆதி 28:13)

இதுதான் அவன் கண்ட காட்சி. தேவதூதர்கள் இறங்குகிறவர்களாகவும் ஏறுகிறவர்களுமாகவும் காட்சி தந்ததால் அவனுக்காக தேவதூதர்கள் வழியில் இறங்குவார்கள், ஏறுவார்கள் என்று பொருள். ஆனால் யாக்கோபு கண்ட காட்சி ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும். அப்படியெனில் ஏற்கெனவே தேவதூதர்கள் இறங்கியிருக்கிறார்கள். இறங்கிய தூதர்கள் ஏறுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?

யாக்கோபே, நீ ஒரு இடத்தை அடையுமுன் உனக்காக அங்கே தேவதூதர்கள் ஏற்கனவே இறங்கியிருப்பார்கள். நீ வருவதற்கு முன்னே உனக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். தேவபிள்ளையே, உனக்கு நான்கு திசைகளும்

அடைக்கபட்டிருந்தால் உனக்காக மேலே ஒரு வாசல் திறக்கும், அது உனக்குப் பாதுகாப்பை உருவாக்கும்.

4. ஆவியானவர் இறங்கினார் :

பூமியில் இயேசு தெய்வமாக உருவெடுக்கவில்லை. அவர் மனிதனாக மாறிவிடவில்லை. அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார். அதே சமயத்தில் அவருடைய தெய்வீகம் அவரைவிட்டு விடைபெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவருடைய ஊழியத்தில் இயல்பாகவே தன்னிடம் அமைந்திருந்த தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தாமல் பரிசுத்த ஆவியானவரால் செயற்படவே தொடங்கினார். இதற்காகவே அவர் மீது ஆவியானவர் இறங்கினார்.

“பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்” (ஆதி 1:2) ஒழுங்கின்மையும் வெறுமையுமான உலகைச் சீர்படுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். இன்றும் பாவியான மனிதனின் மனசாட்சியில் மனந்திரும்பு என்ற சத்தத்தோடு ஆவியானவர் அசைவாடுகிறார்.

ஆனால் இயேசுவின் மீது ஆவியானவர் அசைவாடவில்லை. அவர் மீது புறாவைப்போல அமைதியாய் அமர்ந்தார். இயேசுவோடு ஆவியானவர் போராட அவசியமே இல்லை. (He was resting upon Jesus)

இயேசுவின் மீது அமர்ந்த ஆவியானவர் என்ன செய்தார்? "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்" என்று வேதம் சொல்கிறது (ஏசா 11:2) இதன் பொருள் என்ன?

இயேசு தனது இயல்பான தெய்வீக ஞானத்தினால், உணர்வினால் செயற்படாமல் பரிசுத்த ஆவியானவர் தரும் ஞானத்தினால், உணர்வினால், ஆலோசனையால் செயற்பட்டார். அவரின் வார்த்தைகளைக் கேட்பவர்களும், பரிசுத்த ஆவியானவர் அருளும் தெய்வ பயத்தினால் தேவஅறிவினால் செயற்படவும் சித்தம் கொண்டார். ஆகவே மனுவுருவில் வெளிப்பட்ட இயேசு பரிசுத்த ஆவியானவரால் தீர்க்கத்தரிசியாய் செயற்பட்டார். அவர் தனது ஜீவனைக் கொடுத்து சபையின் தலையானார். இப்படி ஜீவனைக் கொடுக்கும் பாடுகளில் பங்குபெற, ஆவியானவர் அவருக்கு உதவி செய்தார்.

மாம்சத்தில் வெளிப்பட்டு ஆவியானவரின் அபிஷேகத்தால் இயேசு பலத்த செய்கைகளைச் செய்ததுபோல, தேவபிள்ளையான நீயும் அவரைப்போலவும் அவர் சொன்னபடி அவரிலும் பெரிய கிரியைகளையும் (!) செய்யமுடியும். ஆகவே யோர்தான் நதிக்கரையில் நீ கேட்கும் சத்தம் "ஆவியில் பலப்படு"

5. புறாவைப்போல: மத் 3:16

வேதம் கழுகைப் பலத்திற்கு அடையாளமாகக் கூறுகிறது. ஆனால் கழுகு பட்சிக்கிற பறவை. ஆவியானவர் முரட்டுத்தனம் உடையவர் அல்ல. இயேசு சர்வவல்லவர், ஆனால் உலகிலுள்ள முரட்டு சர்வாதிகாரி அல்ல. அவர்மேல் தங்கியிருந்த ஆவியானவர் பணிந்து விடு என்று பலாத்காரம் செய்கிறவர் அல்ல. அடைபட்ட கதவை மெல்லத்தட்டும் அன்புக்கரமே ஆவியானவர். அந்த அன்பின் வல்லமையின் அபிஷேகமே புறா வடிவமாகத் தோன்றியது.

கிறிஸ்துவின் ஆவி கபடற்றது. ஆகவே அவர் மீது ஆவியானவர் புறாவைப்போல இறங்கினார். தேவபிள்ளையே, நீயும் புறாவைப்போல கபடு, வஞ்சகம் இல்லாமல் இரு. புறா ஒரு நேரத்தில் ஒரு பொருளைத்தான் பார்க்கும். இயேசுவும் தன் ஜீவிய காலம் முழுதும் ஒன்றினையே நோக்கினார், அதாவது பிதாவின் சித்தத்தை மாத்திரமே.

சகோதரனே! சகோதரியே, உன் வாழ்நாள் முழுவதும் தேவசித்தத்தையே உன் இலக்காக வைத்திரு. அதனை விட்டு ஒரு நொடிப்பொழுதும் விலகிவிடாதே. ஆனால் பேதையான புறாவைப்போல இருக்காதே. (ஓசி 7:11) தேவ ஞானத்தினால் நிறைந்திரு.

“இன்று மாலை பூங்காவில் உனக்காகக் காத்திருப்பேன். கல்லூரியிலிருந்து நேரே அங்கு வந்துவிடு” இந்தக் குரல் நாளெல்லாம் அவள் இதய

வானில் எதிரொலித்தது. "கல்லூரியிலிருந்து நேரே வீட்டிற்கு வந்து விடு; வேறு எங்கும் போகாதே காலம் மிகவும் கெட்டுவிட்டது மகளே" என்ற தாயின் சொற்கள் நினைவைவிட்டு நீங்கிவிட்டன. பூங்காவில் பூங்காற்றில் தொடங்கிய அவர்களது சந்திப்பு விரைவில் அவள் வாழ்வில் புயற்காற்றாய் வீசத்தொடங்கியது...

சந்தித்த வாலிபன் வல்லூறாய் வெகுதூரம் பறந்துவிட்டான். ஐயோ! மோசம்போனேனே என்று கதறி அழுது ஒரு முடிவுக்கு வந்தாள். அவள் சிந்தனையின் முடிவு அவள் வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டது. "ஏமாற்றத்தால் கல்லூரி மாணவி தற்கொலை" என்ற தலைப்புச் செய்தியோடு அன்றைய நாளேடுகள் நாலு திசைகளிலும் பறந்தன. அவள் பேதையான புறா! நீயோ தேவ ஞானத்தில் இரு. பாவிகள் உன்னை நயம் காட்டி இழுத்தால் அதற்கு நீ சம்மதியாதே.

புறாவின் கண்கள் நீர் நிறைந்தவைகள். உன் கண்கள் ஆத்ம பாரத்தால் கலங்கியிருப்பதாக. "உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகின்றன" (சங் 119:136) என்கிற வார்த்தைகள் நமது அனுபவங்களாக மாறட்டும். புறாவைப்போல பாவத்தை எண்ணிப் புலம்பு. "எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்திலே கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு." (ஏசா 38:14)

பறவைகளிலேயே பலிப்பொருளாக விளங்குவது புறா மாத்திரமே. (லேவி 1:14) தேவனது பரிசுத்த பிள்ளையே, உன் வாழ்க்கை அவரது பணியில் பலியாகட்டும். “நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது” (2 தீமோ:4:6) என்ற பவுலின் வார்த்தைகள் நம் பரிசுத்த வாழ்க்கையை அர்ப்பணிப்பிற்கு ஆயத்தமாக்கட்டும்.

நோவாவின் காலத்துப் பெருவெள்ள நேரத்தில் “தேவ தண்டனையின் காலம் முடிந்துவிட்டது, புது உலகம் உதயமாகிவிட்டது” என்ற நற்செய்தியை ஒலிவ இலை வழியாய்க் கொண்டு வந்தது ஒரு புறாவே. நீயும் கிறிஸ்துவின் நற்செய்தியை சிற்றூர், பேரூர், குடிசைகள், மாளிகைகள் இங்கெல்லாம் எடுத்துச் செல்.

கல் முன் விழுந்து என்னைக் காப்பாற்று என்று அழுது நிற்கும் பாமர மக்களுக்கும், பதிமூன்று அகவைகூட தாண்டியிராத ஒரு சிறுபையனை ஆண்டவனின் அவதாரம் என்று கூறி பட்டம் பெற்றோர், உயர்பதவி வகிப்போர், சொத்து சுகமுடைய பெரிய மனிதர்கள் என்று அவன் பாதத்தில் விழுந்து சிந்தனைத் தடுமாறிப் போவோருக்கும் இயேசு என்ற இரட்சிப்பின் செய்தியைச் சுமந்து செல்லும் புறாவாக இரு.

6. தேவனது சத்தம்: (மத் 3:17)

உலகில் எத்தனையோ சத்தங்களைக் கேட்டு மகிழ்கிறாய். பிரியமுள்ள... என்று உன்னை

அழைத்ததும் இதயமெல்லாம் துள்ளுகின்றது, ஆனால் உலகம் உன்னைப் பாராட்டுவது உண்மையில் உணர்வினால் அல்ல. பாசத்தினால் குடும்பம் பாராட்டலாம். அந்தப் பாராட்டில் அன்பு இருக்கும், நேர்மை இல்லாமலும் இருக்கலாம். ஆனால் கடவுள் உன்னைப் பாராட்டினால் அதில் அன்பும் உண்டு; நீதியும் உண்டு.

"இவர் என் நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற பிதாவின் சத்தம் சத்தியத்தின் சத்தம். நீ எந்தச் சத்தத்தில் மகிழ்கிறாய்? அர்த்தமில்லா உலகின் புகழுரைகளில் மயங்கிவிடாதே. சந்தர்ப்பவாதிகளின் நிலையற்ற வார்த்தைகளில் சமாதானம் அடையாதே. தேவசத்தத்தில் மகிழ்ந்திரு.

"உன்னிடத்தில் குறைவு உண்டு" என்ற அந்தச் சத்தம் சொன்னால் குறைவை ஒத்துக்கொண்டு அதை நீக்கிவிட நீ பிரயாசப்படு. அப்படியல்ல ஆண்டவரே என்று லோத்தைப்போல் எதிர்த்துப் பேசாதே.

சிலுவைப்பாதை வேண்டாம் என்று ஆரம்பத்தில் சாத்தானின் சத்தமாயிருந்த பேதுரு, பின்னாட்களில் சிலுவையைக்குறித்து ஆவியில் பேசி இறைவனது சத்தமாக மாறினது உனக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கட்டும்.

7. அவர் தண்ணீரிலிருந்து கரையேறினார் (மத் 3:16)

ஆண்டவர் தண்ணீரிலிருந்து வெளியே கரையேறினபொழுது கடைசியில் தண்ணீரைவிட்டு

வெளியே வந்தவை இயேசுவின் திருப்பாதங்கள். ஆனால் ஞானஸ்நானம் பெற அவர் யோர்தான் நதியில் இறங்கும்பொழுது முதலில் தண்ணீரில் இறங்கியவை அவரது பாதங்கள்தான்.

அந்தப் பாதங்கள் நன்மை செய்கிறவரான அவரைச் சுமந்து சுற்றித் திரிந்தன. ஞானஸ்நானம் பெற்ற உன்னை உன் பாதங்கள் எங்கே அழைத்துச் செல்கின்றன? சத்தியமில்லா சபையின் தாழ்வாரத்தில் பாதங்களை மடங்கி அமர்ந்துவிட்டாயா? பாரம்பரியப் பாதையில் மீண்டும் நடை பழகுகின்றனவா உன் பாதங்கள்?

ஞானஸ்நானம் பெற்ற அவர் பாதங்கள் கரையேறி பிதாவின் பாதையில் நடக்க ஆரம்பித்துவிட்டன. சாத்தான் சோதிக்கும் வனாந்தரத்தில் சத்திய ஜோதியை ஏற்றி நடந்த அவர் பாதங்களை நீயும் பின்பற்றுகிறாயா? உன் பாதங்கள் கடவுளது கட்டளைகளின் வழியாக ஓடுகின்றனவா?

இயேசு யோர்தானில் கரையேறினவுடனே அவர் பிதாவை நோக்கி ஜெபித்தார். ஞானஸ்நானம் உன்னை ஜெப அறைக்கு இழுக்காவிட்டால் நீ பெற்றது ஞானஸ்நானம் அல்ல, ஸ்நானம். ஞானஸ்நானம் பெற்ற நீ உன் பாதங்களைப் பொல்லாத வழிகளுக்கு விலக்கிக் காத்துக்கொள். நீ கிறிஸ்துவின் நற்செய்தியோடு நடந்து திரிந்தால் பரலோகம் சொல்லும், “உன் பாதங்கள் அழகாக இருக்கின்றன” (ஏசா 52:7) என்று.

இயேசு பல கல் தொலைவு நடந்து யோர்தானில் ஞானஸ்நானம் பெற வருகிறார். யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தயங்குகிறான். தேவகுமாரனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க நான் எம்மாத்திரம் என்று எண்ணுகிறான். ஆனால் இயேசுவோடு நின்ற அவனது வாழ்க்கையில் பல சம்பவங்கள்....

1. யோவானுக்கு உண்டான தகுதி :

கிறிஸ்துவுக்காக ஒன்றைச் செய்ய நான் எம்மாத்திரம் என்பது மனத்தாழ்மையின் எதிரொலியாக இருந்துவிட்டால் பரவாயில்லை. ஆனால் அதுவே கடமைக்குத் தடைக்கல்லாக இருந்துவிடக்கூடாது. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தனக்குத் தகுதி இல்லை என்று யோவான் எண்ணியது நியாயமானதே. ஆனால் நமது கர்த்தர் கூறுகிறார், யோவான் ஞானஸ்நானம் கொடுப்பது அவனுக்கு ஏற்றதாயிருக்கிறது. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது. (மத் 3:15)

தனக்கு ஞானஸ்நானம் கொடுப்பது யோவானுக்குக் கிடைத்த மிகப்பெரிய சிலாக்கியம் என்று இயேசு எண்ணவில்லை. அப்படியே தானும் யோவானிடம் ஞானஸ்நானம் பெறுவது தனது தரத்திற்குக் குறைவான செயல் என்றும் இயேசு எண்ணவில்லை.

கடவுளுக்கு ஊழியம் செய்வது, தேவனால் நமக்குக் கிடைத்த தகுதி. நாம் பெருமைபாராட்ட

நம்மில் எந்தத் தகுதியும் இல்லை. “எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது” (2 கொரி 3:5) என்று பவுல் கூறுகிறார்.

ஆகையால் தேவப்பிள்ளையே, உன் ஆவிக்குரிய சிலாக்கியம் கடவுள் ஈவாகத் தந்த தகுதி. அதனைத் தாழ்மையுடன் காத்துக்கொள். இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்றாலும் ஆவிக்குரிய அதிகாரத்திற்குத் தன்னைக் கீழ்ப்படுத்தினார். ஆதனால் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றார். ஆகவே எவ்வளவு உயர்த்தப்பட்டாலும் தாழ்மையாயிரு.

பெத்தானியா சீமோன் இயேசுவிற்கு விருந்தளிக்கும் வாய்ப்பைக் கடவுள் தனக்குத் தந்த கிருபையின் தகுதி என்று எண்ணாமல் பெருமையாக எண்ணினான். கர்த்தரோ விருந்திற்காக அவனைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவனது மேட்டிமைக்காக அவனைக் கடிந்துக்கொண்டார். நாம் தேவனுக்கு எதையாவது செய்தால் உலகம் உடனே நம்மைப் பாராட்டத் தொடங்குகிறது. வல்லமையான ஊழியர், வரம் பெற்ற தேவதாசன், உலகப்புகழ் பெற்ற தன்னிகரில்லா செய்தியாளர் என்றெல்லாம் புகழ்கிறது.

இயேசு தெருவழியாய் நடந்து வருகையில் ஒரு பெண் உரத்த குரலில் உம்மைச் சுமந்த கர்ப்பமும் உமக்குப் பாலூட்டிய சரீரமும் பாக்கியமுள்ளவைகள் என்று பாராட்டும்பொழுது,

ஆண்டவர் வேத வசனத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களை அதிலும் அதிகமாகப் பாராட்டுகிறார். ஆகவே நாமாகவே ஒரு தகுதியை நமக்கோ, மற்றவர்களுக்கோ உண்டாக்கக்கூடாது.

"இது நான் கட்டிய மகாபெரிய பாபிலோன் அல்லவா" என்று தன் தகுதியை கடவுளுக்கு மேலாக உயர்த்தினவுடன் அவன் புழுதியிலே தள்ளப்பட்டான்.

2. யோவானின் முன்பிருந்த கடமை: (மத் 3:3)

கர்த்தராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தும் பணி யோவானுடையது. "அவாந்திர வெளியிலே தேவனுக்குப் பாதையைச் செவ்வைப் பண்ணுங்கள், பள்ளங்களெல்லாம் உயர்த்தப்படும், மலையும் குன்றும் தாழ்த்தப்படும்; கோணலானது செவ்வையாகும், கரடு முரடானவைகள் சமமாக்கப்படும்" என்று கூப்பிட்டு உணர்த்துவது இவனது வேலை. அவன் காலத்தில் யூத சமயத்தில் ஊழல்! ஆலயத்தில் மாயமாலக்காரர்கள்! சுயநீதிக்காரர்களின் மேட்டிமை! தெய்வ பயமில்லா மக்கள்! இவைகள் நிறைந்த சமுகத்தில் அவைகளை எதிர்த்து நின்றான் யோவான்.

அவன் காலத்தில் தேவனை மறந்த மக்கள் கோவில்களைக் கட்டினார்கள். (ஓசியா 8:14) இன்றும் பரிசுத்தமில்லாதவர்கள் கம்பீர ஆலயங்களைக் கட்டுகிறார்கள். அவைகள் கர்த்தரின் வார்த்தைகளுக்கு கல்லறையாக மாறிவிடுகின்றன. ஆயிரம் ஆயிரம் புத்தகங்கள் கிறிஸ்தவ உலகில் குவிகின்றன. புரட்சி நடையில் புதுமைப்படைப்புகள்.

சிங்கார மொழியில் சீர்திருத்த முழக்கங்கள். ஆனால் கர்த்தர் அப்புத்தகங்களுக்கு ஒரு வரியில் முன்னுரை எழுதுகிறார், "வேதபாரகரின் கள்ள எழுத்தாணி" யோர்தானில் கர்த்தரோடிருந்த யோவானைப்போல நீயும் தேவதரிசனத்தை, எச்சரிப்பை முழக்கமிடும் தேவசத்தமாக இருப்பாயா?

வேதபாரகர்கள், பிரதான ஆசாரியர்கள் வாழும் நேரத்தில் தேவனது வார்த்தை வனாந்திரத்தில் சஞ்சரித்த யோவானுக்கே உண்டாயிற்று. மக்களின் பாவங்களை, குற்றங்களை, அசுத்தங்களை வெளியரங்கமாக்கும் வேலை யோவானுடையது. சத்தியத்தை மறைத்து கட்டுக்கதைகள் பேசும் ஊழியக்காரர் மத்தியில் சிலுவையை மறைத்து கிறிஸ்தவ சலுகைகளைப் பிரசங்கிக்கும் போலி ஊழியர்களுக்கு மத்தியில் சத்தியத்தை அறிவிக்க ஆயத்தமாக இருக்கிறாயா?

"ஐயாயிரம் பேரைப் போஷித்த ஆண்டவர் உன் வீட்டு வாசற்படியில் உன்னை ஆசிர்வதிக்க வந்திருக்கிறார்" என்று மக்கள் இதயம் குளிர பிரசங்கம் பண்ணாதே. "உன்னிடம் உள்ள இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் கொடுத்துவிடு" என்று பிரசங்கம்பண்ணு. யோவான் தன் காலத்தில் ஊறிப்போன பாரம்பரியங்களை, அரசியல் அவலங்களைச் சாடினான். கொலுமண்டபம் அதிர குற்றங்களைக் கண்டித்தான். சகோதரனே, நீ அப்படி இருப்பாயா?

பாவத்தை உணராத, இரட்சிக்கப்படாத நிர்மூடர்களை நீரில் அமிழ்த்தி ஞானஸ்நானம் கொடுக்கும் ஞானமற்ற ஊழியக்காரர்கள் கவனிக்க வேண்டிய ஒரு உண்மை, யோவான் ஸ்நானகன் மனந்திரும்பாமல் சடங்காச்சார ஞானஸ்நானம் எடுக்கத் துடிப்போரை ‘‘விரியன் பாம்புக் குட்டிகளே’’ என்று அதட்டினான் என்பதே. இந்த ஆவிக்குரிய வைராக்கியம் உனக்கு உண்டா?

காலமெல்லாம் குடித்து வெறித்து குடிவெறியில் சாவை அணைத்துக் கொண்டவனை ‘‘நல்ல போராட்டத்தைப் போராடினார்; தன் ஓட்டத்தை வெற்றியாய் முடித்தார்’’ என்று கல்லறை தோட்டத்தில் பொய்யுரையை பரலோக உரையாக ஆற்றும் பாதகர் கூட்டத்தை விட்டு விலகு.

3. யோவான் யார்: (யோ 1:23)

யோவான் வனாந்தரத்தில் தேவனுடைய சத்தம். இயேசு கிறிஸ்து வார்த்தை; யோவான் வார்த்தையின் சத்தம். நீ ஆராதனைக்குச் செல்லும் சபையில் தேவசத்தம் கேட்கிறதா? உலகத்தின் சத்தம் கேட்கிறதா? விளங்காத சப்தமிடும் எக்காளங்களாகப் பலர் இருக்கும்பொழுது யோவான் தேவனது சத்தமாக இருந்தான்.

பாவச்சேற்றில் உழலும் மக்களை யோவான் வாழ்த்துச் செய்தியோடு சந்திக்கவில்லை. மனந்திரும்புங்கள் என்ற எச்சரிப்பின் சத்தத்தோடு யோர்தான் நதிக்கரையில் நின்றான். யூதேயாவின் வனாந்திரம் ‘‘மனந்திரும்பு’’ என்று அவன் சத்தத்தை

எதிரொலித்தது. இன்று நம்மைச் சுற்றிலும் தேவசெய்தியின் எதிரொலி கேட்கிறதா? மனந்திரும்புங்கள் என்ற சத்தமே அனேக பிரசங்க மேடைகளில் கேட்கப்படவே இல்லையே!

பாவ அறிக்கை வேண்டாம்; மனந்திரும்புதல் வேண்டாம். இயேசுவை விசுவாசித்தால் போதும். இரட்சிப்பு வந்துவிடும் என்று இன்று பிரசங்கம் பண்ணுகிறார்களே, எந்த இயேசுவை விசுவாசிக்க வேண்டும்? வேதத்தில் சொல்லப்படாத இயேசுவைப் பிரசங்கிக்கிறார்களே, அந்த இயேசுவையா விசுவாசிக்க வேண்டும்?

"அறியாமையுள்ள காலத்தில் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார்" (அப் 17:30) என்று வேதம் சொல்லவில்லையா? கர்த்தரின் கட்டளையையா அல்லது மனிதக் கற்பனையையா எதைப் பிரசங்கம் பண்ணுகிறீர்கள்? எந்தப் பிரசங்கத்தைக் கேட்கிறீர்கள்?

ஞானஸ்நானம் பரலோகத்திற்கு குறுக்கு வழி அல்ல. மனம்திரும்பாத இருதயத்தோடு எடுக்கும் ஞானஸ்நானம் சடங்காச்சாரம். அவர்களுடைய பெயர்கள் ஆலயப் பதிவேட்டில் இருக்கும். ஆண்டவரின் ஜீவப்புஸ்தகத்தில் இருக்காது.

தேவசத்தம் கேள்; தேவசித்தம் செய். நீயும் தேவனது சத்தமாக இரு. உலகத்தின் ஊதுகுழலாக மாறிவிடாதே. நீ தேவனது எக்காளம், உன்

சத்தத்தைக் கேட்டு கிறிஸ்தவம் பாவத்திற்கு எதிராக இரத்தம் சிந்தும் அளவிற்குப் போராட எழட்டும். சத்தியப்பாதையில் கர்த்தரின் சேனை புது நடை போடட்டும்.

4. மனந்திரும்புதலின் விளைவு

மனந்திரும்புதல் என்பது தீர்மானத்தோடு நின்று விடும் செயலல்ல. தன் பிதாவின் வீட்டிற்குப் போகப்போகிறேன் என்று தீர்மானம் செய்த கெட்டகுமாரன் எழுந்து நடந்து கிரியையில் தன் மனந்திரும்புதலை வெளிப்படுத்தினான். இந்த செயல்தான் மனந்திரும்புதலின் கனி. யோவானும் ஜனங்களை மனந்திரும்புதலின் கனிகளைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

திருடுகிறவன் திருடாமல் இருப்பது மனந்திரும்புதல். குறைச்சல் உள்ளவனுக்குக் கொடுத்து உதவுவது மனந்திரும்புதலின் கனி. பொய் பேசாதிருப்பது, மறைந்துக் கிடக்கும் வேர், உண்மை பேசுவது யாவரும் காணும் கனி.

எப்பொழுதும் மௌனமாயிருப்பது வெளித் தோற்றத்திற்கு ஞானியாகக் காட்டுமே தவிர உண்மையில் அவன் மூடனாகவும் இருக்கக்கூடும். ஆகவே மௌனமாயிருப்பதே மனந்திரும்புதலாகி விடாது.

சவுல் சபையைப் பாழாக்கும்படி புறப்பட்டவன், தேவனால் தொடப்பட்டான். உடனே அவன் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள், “ஆண்டவரே

நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" (அப் 9:6) உடனே தன்னைத் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தான். சகோதரனே, நீ உன் இரட்சிக்கப்பட்ட, மனந்திரும்பிய வாழ்வைக் கர்த்தரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறாயா? மனமாறிய சவுல் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களில் பிரசங்கித்தான். (அப் 9:20) இதுதான் மனமாறுதலின் கனி. இந்தக் கனிக்காகவே யோவான் பிரசங்கித்தான்.

கொலுமண்டபம் என்றாலும், கடும் வனாந்தரம் என்றாலும் யோவான் மனந்திரும்பு என்ற வல்லமையான செய்தியைப் பிரசங்கித்தான். இன்றைய கிறிஸ்தவப் பிரசங்க மேடைகளின்று இத்தகையைப் பிரசங்கங்கள் நித்தியமாய் விடைபெற்றுவிட்டன. தழுவலணை பிரசங்கங்கள் மலிந்துவிட்டன. கிறிஸ்துவின் சத்தமாய் யோவான் மாறியதால் அவனது பேச்சு சத்தியத்தின் போர்முரசாக ஒலித்தது.

தேவனது சத்தம் பாரம்பரியத்தின் பரிசு அல்ல, யோவானின் தகப்பன் ஆலயத்தில் ஆசாரியன். யோவானோ காட்டில் திரியும் தேவமனிதன். அவன் கிறிஸ்துவுக்குள் மறைந்திருந்தான். ஆகவே தேவசத்தமாக வெளிப்பட்டான். நீயும் அவருக்குள் மறைந்திரு: அவரது வல்லமையாக வெளிப்படுவாய்.

5. யோவானின் தாழ்மை: (மத் 3:14)

தாயின் வயிற்றிலேயே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவன். ஆனாலும் "நான் உம்மாலே

ஞானஸ்நானம் பெறவேண்டும்" என்று ஞானஸ்நானத்தில் வாஞ்சையுள்ளவனாயிருந்தான்.

இரட்சிப்பு போதும், ஞானஸ்நானம் தேவையில்லை என்று எதிர்வாதம் மிகுந்த நாள்களில் நாம் வாழ்கிறோம். மனிதனின் பெருமை ஞானஸ்நானம் கட்டளையை எதிர்க்கச் சொல்கிறது. ஆனால் ஆவிக்குரிய மிகப்பெரிய சிலாக்கியம் பெற்ற யோவான் ஞானஸ்நானத்தை வாஞ்சித்தான். "நான் சிறுக வேண்டும்; அவர் பெருக வேண்டும்" என்று தன்னை மிகவும் குறைத்துக்கொண்டான்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் சுயப்புகழ்ச்சி கொடிகள் மிக உயரமாக பறக்கின்றன. ஊழியங்கள் மனமேட்டிமையின் கோபுரங்களாக விளங்குகின்றன. கிறிஸ்துவுக்குப் பாதையைச் செவ்வைப்பண்ணும் பணியில் நின்ற யோவான், அவருடைய பாதரட்சையின் வாரைக்கூட அவிழ்க்கும் தகுதி தனக்கு இல்லை என்று மிகவும் தன்னைத் தாழ்த்திய உயர்ந்த மனிதன்.

தன் மீது ஒரு ஊழியத்தைக் கட்டாதவன் யோவான். ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களிடத்தில் பெரியவன் யோவான். ஆனால் அவனது அறிக்கை, "என் இயேசு பெரியவர்"

"இப்பொழுது" இடங்கொடு

யோர்தான் ஆற்றங்கரையில் "இப்பொழுது" என்று ஒரு நேரத்தைக் குறித்து அதற்கு யோவானைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தினார். சகோதரனே வருங்காலத்தைப் பற்றிய பல திட்டங்கள் உனக்கு

இருக்கலாம். நாளைய தினத்திற்காக உனக்கு பல யோசனைகள் இருக்கலாம். ஆனால் கர்த்தரோ "இப்பொழுது" என்று ஒரு நேரத்தை உனக்குக் குறிக்கிறார்.

இப்பொழுது நீ என்ன செய்கிறாய்? என்ன செய்ய வேண்டும் என்பதில் கர்த்தர் மிகவும் அக்கறையுடையவராய் இருக்கிறார். அனனியாவிற்கு சவுலை அறிமுகம் செய்யும்பொழுது கர்த்தர், சவுலை சபையைப் பாழாக்கியவன் என்றோ அல்லது வேறு எந்த நிலைமையிலுமல்ல, "அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்" (அப் 9:11) என்றுதான் அறிமுகப்படுத்துகிறார். ஆண்டவருடைய பார்வையில் மிகவும் முக்கிய நேரம் "**தற்பொழுது**" (In God's sight the best time is **now**)

யோவான் சந்தித்த இயேசு, மகிமையை இழந்த இயேசு அல்ல; தன் மகிமையை மறைத்துக்கொண்ட இயேசுவை. சிலுவையில் மாத்திரம் அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படவில்லை. யோர்தான் நதிக்கரையிலும் இயேசு ஞானஸ்நானம் எடுக்கும்பொழுதும் பாவிகளில் ஒருவராகவே அவர் கருதப்பட்டிருப்பார். அப்படி ஜனங்கள் தன்னைக் கருதி விடுவார்களே என்று இயேசு கவலைப்படவில்லை. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலே அவர் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

சகோதரனே, சகோதரியே! உன் பெயர் புகழ் இவைகளைப்பற்றியே கவலைப்பட்டுக்

கொண்டிருக்காதே. தேவசித்தம் செய்ததினால் நீ தவறாகப் புரிந்துக் கொள்ளப்படலாம். அதனால் உன் பெயர் கெட்டுப்போகும் நிலை ஏற்படலாம். கர்த்தருக்குள் திடமனதாயிரு. என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது என்று யோபு சொன்னதுபோல் பிதாவின் கரத்தையே நம்பியிரு.

பாவிகள் மத்தியில் இயேசு ஞானஸ்நானம் பெறக் காத்திருக்கும்பொழுது கூடியிருக்கும் மக்கள் இயேசுவையும் பாவிகளில் ஒருவராக எண்ணியிருக்கலாம். ஆனால் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று உரைத்தது. ஆம்! பிதா தன் குமாரனை மகிமைப்படுத்தினார். அவர் பாவி அல்ல என்பதை வானத்தைத் திறந்து பரலோகம் சொல்லியது. ஆகவே உன் நியாயத்தையும் கர்த்தர் விளங்கப்பண்ணுவார். உன்னை மக்கள் தவறாக விளங்கிக் கொண்டால் கர்த்தரிடமே தஞ்சம் அடை.

6. உன்னுடைய "இப்பொழுது":

உன்னுடைய ''இப்பொழுது'' பற்றி கருத்தோடு இருக்கிறாயா? யோவானே, இப்பொழுது நான் சொல்வதற்கு உடனே கீழ்ப்படி என்று இயேசு கட்டளையிடுகிறார்.

இயேசு ''இப்பொழுதே உலகில் அக்கினி பற்றியெரிய வேண்டும்'' என்கிறார். (லூக்கா 12:49) ஆம்! இயேசுவின் காலத்தில் உலகில் பாவம் பெருகி அக்கிரமம், அநியாயம் நிறைந்திருந்தது. அந்த

உலகைப் பார்த்து என் (கோப) அக்கினியை இப்பொழுதே போட விரும்புகிறேன் என்றார். ஆனால் சிலுவையில் அவர் இரத்தத்தை சிந்தி பாடுகளின் ஸ்நானத்தை எடுத்து மீட்பைச் சம்பாதிக்க வேண்டுமே என்று உலகை அழிக்காமல் விட்டு விட்டார்.

இப்பொழுதோ, இரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டு விட்டது. இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத் 3:10) என்று தேவனது நியாயத்தீர்ப்பைச் சுட்டிக்காட்டி யோவான் எச்சரிக்கிறான். வேர் அருகே வைக்கப்பட்ட கோடாரியை வேரைத் தறிக்கவிடாமல் தடுத்தது இயேசுவின் புண்ணிய இரத்தமே.

ஆனால் அவருடைய இரத்தத்தைக் காலால் மிதிக்கும் இன்றைய உலகத்தின் மேல் தேவனது கோபக்கினை இறங்க ஆயத்தமாயிருக்கிறது. நீயோ குமாரனின் கோபம் பற்றியெரியாமல் இருக்க உன் முழங்காலைத்தாழ்த்தி ஆண்டவரை நோக்கிக் கூப்பிடு. “இரவும் பகலும் நதியளவு கண்ணீர் விடு. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்திலே கூப்பிடு. உன் இருதயத்தைத் தண்ணிரைப்போல ஊற்றிவிடு. (புல 2:18,19)

கண்ணீரோடு சத்திய வசனத்தை விதை, தரிசனத்தோடு உன்னைச் சுற்றிலும் இருக்கும் இடத்தைப்பார். இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை

ஏறெடுத்துப்பாருங்கள். (யோ 4:35) ஆம்! வயல்வெளிகள் ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாக இருப்பதைக் காண்கிறீர்களா? யோர்தான் நதிக்கரையில் யோவான் சொல்லிய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

“தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி கோதுமையைக் (இரட்சிக்கப்ட்டவர்களை) களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்” (மத் 3:12)

ஆகவே இப்பொழுது தேவ அழைப்பு உன்னில் நிறைவேற இடம் கொடு.

வனாந்தரத்தில் இயேசுவோடு

இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றவுடன் ஆவியானவரால் வனாந்தரத்திற்கு அனுப்பப்பட்டார். பிசாசினால் அவர் சோதிக்கப்படுவதற்கு முன், ஆவியானவரால் அனுப்பப்பட்டார். கடவுளின் பிள்ளையே, நீ எங்கேயிருந்தாலும் ஆவியானவருக்குள் இருக்கவேண்டும். சிமியோன் ஆலயத்திற்கு வரும்பொழுது ஆவியானவரின் ஏவுதலின்படி வந்தான் என்று வேதம் சொல்கிறது. (லூக்கா 2:27) நீ எதைச் செய்தாலும் ஆவியானவரின் ஏவுதலின்படி செய்.

தன் சுயவிருப்பப்படி பரிசுத்த பவுல் ஆசியாவிற்குப் போக விரும்பினார். ஆனால் ஆவியானவரின் நடத்துதலின்படி பிலிப்பு பட்டணத்திற்குச் சென்றார். அங்கே லீதியாள் என்னும் சீமாட்டியை இரட்சிப்பிற்குள் நடத்தினார். தொழிற்சங்கத் தலைவியான இவருடைய வீடே ஜெபவீடாயிற்று. பவுல் ஆவியானவரின் நடத்துதலின்படி செயற்பட்டதால் இப்படி நடந்தது. நீங்களும் எப்பொழுதும் ஆவியானவரின் நடத்துதலுக்குள் இருங்கள்.

1. **வனாந்தரத்தில் இயேசு** (மாற்கு 1:12,13)

“ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பது நாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள்”.

ஞானஸ்நானம் எடுத்து, “இவர் என் நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று பிதாவாகிய கடவுளால் மிகவும் உயர்த்தப்பட்டவுடன் இயேசுவிற்கு சோதனைக்களமான வனாந்தரம் திறவுண்டது. ஆம் சகோதரனே! சகோதரியே, ஆவிக்குரிய சில உன்னத அனுபவங்களைப் பெற்றவுடன் சாத்தான் தனது சோதனைக் கண்ணிகளோடு காத்திருப்பான்.

எரிகோவின் மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு சின்ன ஊரான ஆயி பட்டணம் பெரிய பிரச்சனையாயிற்று. ஆகவே ஆவிக்குரிய வெற்றிக்குப் பிறகு மாம்சத்தில் இளைப்பாறாதே. ஆவிக்குள்ளாகவே இரு.

நாட்டு மக்கள் மத்தியில் திருமுழுக்கு பெற்ற நமது கர்த்தர், காட்டு மிருகங்களுக்கு மத்தியில் விடப்பட்டார். நமக்கும் இதே அழைப்பைக் கர்த்தர் கொடுத்திருக்கிறார். “ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்” என்று சீஷர்களுக்கு இயேசு ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறார். (மத் 10:16)

கொடிய விலங்குகளுக்கு மத்தியில் ஆட்டை அனுப்புவதுபோல நாமும் அனுப்பப்படுகிறோம். உபத்திரவம், நெருக்கம், எதிர்ப்பு இவைகளுக்கு மத்தியில்தான் நாம் கிறிஸ்தவர்களாய் வாழ்ந்துக்காட்ட வேண்டும். ஓநாய்களின் மத்தியில் கிறிஸ்தவன் ஒரு ஆட்டைப்போல ஜீவிக்க வேண்டும்.

ஓநாய்கள் என்றால் நம்மை எதிர்த்து வரும் கடும் சோதனைகளாகும். கிறிஸ்தவ வாழ்க்கையே கடுமையான போராட்டக் களம். கடவுள் நம் வாழ்க்கையில் பலமான சோதனைகளை அனுமதிப்பார். “அன்றியும் தேவபக்தியாய் நடக்க விரும்புகிற யாவரும் துன்பப்படுவார்கள்” என்று வேதம் சொல்லவில்லையா? ஓநாய்களின் மத்தியில் நாமும் ஓநாய்களாக மாறிவிடக்கூடாது.

பிசாசு நம்மைச் சோதிக்கும் வேளைகளில் நாம் எப்படி இருக்க வேண்டும்? “நீங்கள் பலவித சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.” (யாக் 1:2,3)

சோதனைகள் மிகவும் கஷ்டமானவைகள்; மனதிற்குப் பாரமானவைகள்தான். ஆனால் நமக்கு வரும் சோதனைகளை நாம் சந்தோஷமாக எண்ணவேண்டும் என்று வேதம் சொல்கிறது. சோதனைகளான வியாதி, வறுமை, எதிர்ப்பு, அவமானம் இவைகள் முடிவில் கடவுளுக்கு மகிமையாய் அமைந்துவிடும். லாசருவின் வியாதி,

மரணமாய் மாறி உயிர்த்தெழுதலாக கடவுள் திருப்பெயர் மகிமையடையும்படி அமைந்ததுபோல கிறிஸ்துவின் பலி இரட்சண்யமாக மாறியதுபோல, உன் துக்கமும் சந்தோஷமாக மாறி கடவுளை மகிமைப்படுத்தும். ஆகவே இன்று நீ சந்திக்கும் எல்லா சோதனைகளையும் சந்தோஷமாக எண்ணு.

நமது கர்த்தரும் சிலுவையைப் பொறுமையாய் சகித்ததை வேதம் மிக அருமையாய்ச் சொல்கிறது. “இயேசு தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார்.” (எபி 12:2) அவருக்கு முன் வைக்கப்பட்ட சந்தோஷமென்ன? பாவிகளின் இரட்சிப்பு. இதுதான் அவருடைய ஆத்தும வருத்தத்தின் பலன். இதனைக் கண்டே அவர் சிலுவையைச் சகித்தார். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது அவர் தமது சந்ததியைக் கண்டார் என்று குறிப்பிடுவது நமது இரட்சிப்பையே. (ஏசா 53:10)

நமது இரட்சிப்பை எண்ணியே அவர் சோதனைகளைச் சகித்தார். நாமும் கிறிஸ்துவோடு நமக்கு வரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, இன்றைய பாடுகளுக்கு நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுப்போம். தெய்வீகத்திற்கு அப்பால் மனித உருவில் நமது இயேசு சோதனைகளைத் தாக்குப்பிடிக்கும் வல்லமைக்கு காரணம். அவர் ஆவியின் ஏவுதலின்படி செயற்பட்டதே.

2. சோதனை என்றால் என்ன?

"ஏன்தான் கடவுள் என்னை இப்படி சோதிக்கிறாரோ" என்று மனிதன் சீக்கிரம் அலுத்துக் கொள்கிறான். கடவுள் நம்மைச் சோதிக்கும்பொழுது நம்மை உருவாக்குகிறார். சாத்தான் நம்மைச் சோதிக்கும்பொழுது நம்மை உடைக்கவே விரும்புகிறான். (Through trails Satan tries to break us, while God tries to make us)

சாத்தான் இயேசுவை உடைக்கவே விரும்பினான். பிதா – குமாரன் என்ற உறவைத் துண்டிக்கவே அவன் விரும்பினான். "நீர் கடவுளுடைய குமாரனேயானால்" என்ற உறவை முறிக்கும் வார்த்தைகளையே சாத்தான் பயன்படுத்துகிறான். உன் கடவுள் எங்கே என்ற கேள்வியைப் பலரது எண்ணங்களில் உருவாக்குவதே சாத்தானின் பிரதான வேலை.

"எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்ட இயேசு" என்று (எபி 4:15) வேதம் சொல்கிறதே, அப்படியானால் மனிதனுக்கு ஏற்படும் எல்லா பாவச்சோதனைகளும் அவருக்கு இருந்தனவா? மனிதன் மண், பொன், பெண் என்று பலவிதத்திலும் சோதிக்கப்படுகிறானே, அப்படியே இயேசுவும் மனிதனைப்போல சோதிக்கப்பட்டாரா என்ற ஒரு கேள்வி எழலாம்.

பாவம் மனிதனுக்குள் வருவதற்கு மூன்று வழிகள் (Three Avenus) உள்ளன. அவை கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவியத்தின் பெருமை.

இந்த மூன்று வழிகளிலும் வந்த சோதனைகளையெல்லாம் இயேசு ஜெயித்தார். மற்றபடி தனித்தனியாக ஒவ்வொரு பாவ சோதனையும் அவருக்கு உண்டாகாது.

இந்த மூன்று வழிகளிலும் சோதனைகளைக் கொண்டுவந்து சாத்தான் இயேசுவை உடைக்கப் பார்த்தான். உனக்கும் சோதனைகள் உண்டு; எனக்கு சோதனையே வரக்கூடாது என்று நீ ஜெபிப்பதில் பயனில்லை. சோதனையில் நின்று வெற்றிபெற ஜெபம் பண்ணு.

3. இயேசு சோதனைகளை எப்படி ஜெயித்தார்?

மனிதன் எளிதில் சோர்ந்துபோவது உலகப்பிரகமான தேவைகள் சந்திக்கப்படாததினால். பசி, தாகம், வறுமை இவைகளில் அனேகர் கிறிஸ்துவுக்காக நின்று பிடிக்கக்கூடாமல் விழுந்து போகின்றனர். நூற்பது நாள் இயேசு உபவாசமிருந்து மிகுந்த பசியோடு இருக்கும் வேளையில் சாத்தான் அவரைச் சோதிக்க வருகிறான். பொதுவாக நாம் களைப்பாக பசியோடிருக்கும்பொழுது சாத்தான் நம்மைச் சோதிக்க வருவான். அந்தப் பலவீனமான சூழ்நிலையில் நாம் உணர்வுகளால் ஆளப்படுவோம். அந்த வேளையை அவன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்புவான்.

இயேசு பசியோடு இருக்கும்பொழுது “இந்தக் கற்களை அப்பமாக மாற்றும், நீர் தேவகுமாரன் எனில் ஏன் பசியோடு இருக்கிறீர்? உமது வல்லமையினால் கற்களை அப்பமாக மாற்றும்” என்று சாத்தான்

இயேசுவைத் தூண்டுகிறான். (மத் 4:3) இயேசுவை மனுஷகுமாரன் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கடவுள் என்ற நிலையில் செயற்படும்படி தூண்டுகிறான்.

“பிதாவின் ஆளுகையில் ஏன் மனுஷகுமாரனாய் செயல்படுகின்றீர்?” அதைத் தூர எறிந்துவிட்டு தெய்வீகத்தில் செயல்படும் என்று இரட்சிப்பின் திட்டத்தை நொறுக்கும்படியாகவே பிசாசு இயேசுவைத் தூண்டுகிறான். உங்கள் இரட்சிப்பை, பரிசுத்தத்தை நொறுக்கும்படியாகவே சாத்தான் எப்பொழுதும் தருணத்தை எதிர்நோக்கியிருக்கிறான். அவனுடைய உபாயதந்திரங்களுக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

4. சாத்தானின் சோதனைகள் :

சாத்தான் மகா பயங்கரமான உருவத்தில் வந்து சோதிக்கமாட்டான். வஞ்சகமான பிரசங்கத்தில் வேதவசனத்தை மேற்கோள் காட்டி, மிக எளிதில் உங்களை வஞ்சித்துவிடுவான். ஆகவே வேத வசனங்களை மிகவும் விழிப்புடன் கேளுங்கள்.

முதற்சோதனையில் அவன் வேதவசனத்தை பயன்படுத்துவதில் மனிதர்களின் உணர்வுகளை பயன்படுத்தினான். கவலை, பயம், வியாதி, பசி, தாகம் இவைகளில் நாம் இருக்கும்போது நம் உணர்வுகளோடு பிசாசு விளையாடுகிறான். இயேசு நாற்பது நாள்கள் உபவாசமிருந்து பசியோடிருக்கும் வேளையில் பிசாசானவான் இந்தக் கற்களை அப்பங்களாக மாற்றும் என்று அவருக்குச் சாப்பிட வழிவகுத்துக் கொடுக்கிறான்.

இயேசுவினால் கற்களை அப்பங்களாக மாற்ற முடியும். ஆனால் அது பிதாவின் சித்தமா என்றுதான் குமாரன் முதலாவது எண்ணிப் பார்ப்பார். தாமாக எதையுமே அவர் செய்ய மாட்டார். மனித உருவில் அவர் பிதாவிற்குக் கீழ்ப்பட்டவராகவே அவரது சித்தத்தின்படி மாத்திரமே ஜீவிக்க விரும்பினார்.

சகோதரனே, உங்களால் முடியாத, இயலாத காரியங்களுக்கு மாத்திரம் நீங்கள் கடவுளின் சத்தத்தை அறிந்துக்கொண்டு, உங்களால் இயலக்கூடிய காரியங்களுக்கு உங்கள் சுயசித்தத்தின்படியே நடப்பீர்களானால் அது நல்ல ஆவிக்குரிய வாழ்க்கை அல்ல. அதனால் நீங்கள் கடுமையான விளைவுகளைச் சந்தித்து வாழ்க்கையில் மிகவும் சோர்ந்துபோவீர்கள். எப்பொழுதும் கடவுளின் சித்தத்தின்படியே செய்யுங்கள்.

நமது கர்த்தரும் பிசாசை நோக்கி கடவுளுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்று பிதாவின் சித்தத்தையே அவர் சுட்டிக்காட்டினபடியால் பிதா குமாரன் என்ற உறவை அவர் உறுதியாய் தெரிவித்தார்.

நீயும் இந்த உறவில் உறுதியாயிரு. இந்த உறவை உடைக்கவே பிசாசானவன் பல சோதனைகளைக் கொண்டுவருகிறான். இயேசு உனக்குப் பிதாவாக இருந்தால் உன்னைப் பசியில் போடுவாரா? உடை, பணம், வேலை இவைகளைத் தராமல் உனக்குப் பிதாவாக இருக்கலாமா? நீயும்

அப்படி ஏற்றுக்கொள்ளலாமா? என்று சத்துரு உங்களோடு சொல்லும்பொழுது தைரியமாக சொல்லுங்கள். அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று.

இயேசு வேதவசனத்தை சுட்டிக்காட்டிய உடனே சாத்தானும் வேதவசனத்தை சுட்டிக்காட்டுகிறான். ‘‘தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுப் போவார்கள்’’ என்ற சங் 91:11 வசனத்தைச் சுட்டிக்காட்டி இயேசுவை உப்பரிகையின் மீதிருந்து கீழே குதிக்கும்படி சாத்தான் ஏவினான்.

வேதவசனத்தை, வாக்குத்தத்தத்தை கடவுளின் முகத்திற்கு நேரே காட்டி இப்படிச் சொல்லியிருக்கிறீரே என்று உரிமை பாராட்ட நாம் யார்? அவர் சொன்னதைச் செய்யும்வரைக்கும் நாம் காத்திருக்க வேண்டுமேயன்றி இப்படி எழுதியிருக்கிறதே என்று போராட்டத்தில் குதித்துவிடக் கூடாது. மேலும் சங் 91:11 மேலிருந்து கீழே குதிக்கும் சாகசங்களுக்காக எழுதப்பட்ட வசனம் அல்ல இது. தூதர்களின் வேலை தாழக்குதிக்கும் வீரர்களைத் தாங்கிப்பிடிப்பதும் அல்ல.

‘‘இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பப்படும் தூதர்கள் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்.’’ (எபி 1:14) ஆகவே இரட்சிப்பின் பாதை கடவுள் நியமித்திருக்கும் பாதை. அதைத்தான் உன் பாதையெல்லாம் என்று வேதம் சொல்கிறது. இந்தப்

பாதையில் ஆவிக்குரிய ஓட்டத்தைத் தடுக்கும் கற்களையெல்லாம் நீக்கி ஆவிக்குரிய பாதங்கள் இடறாதபடிக்கு பத்திரமாக பரலோகத்திற்கு நம்மை தேவதூதர்கள் சுமந்துச் செல்கின்றனர்.

மற்றபடி நாம் மலையிலிருந்து, மாடியிலிருந்து குதித்தால் தேவதூதர்கள் தாங்கி பிடித்துக் கொள்வார்கள் என்பது மதிகேடு, துணிகரம். சாத்தானும் வசனத்தை முழுமையாக சொல்லாமல் உன் வழிகளிளெல்லாம் என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டுப் பேசுகிறான். ஆகவே வேதவசனம் சரியாகச் சொல்லப்படுகிறதா என்று மிகக் கவனமாயிருங்கள்.

மூன்றாவதாக, அவனது முதன்மையான நோக்கமாகிய தொழுகையை பறித்துக்கொள்ள சோதிக்கிறான். "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துக்கொண்டால்" என்று சாத்தான் சொன்னவுடன் மேலும் தர்க்கம் செய்யாமல் "அப்பலே போ சாத்தானே" என்று அவனை இயேசு விரட்டினார். ஆம்! தொழுகைக்கு விரோதமாக சாத்தான் எழுந்தால் உடனே அவனைத் துரத்தி விடவேண்டும்.

இவ்வாறு பிந்தின ஆதாமாகிய இயேசு எல்லா சோதனைகளையும் வென்று பிதாவோடு கொண்டிருந்த உறவில் அவர் உறுதியாய் இருந்தார். நீயும் இந்த உறவைப் பற்றிக்கொண்டிரு. "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசா 26:3) என்று

வேதம் வாக்களிக்கும் சமாதானத்தை இழந்து போகாதீர்கள்.

5. சோதனையின் இடம் :

"இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாருமே சுகமாகத்தானிருப்பார்கள்" என்று ஒரு வழக்குச் சொல் உண்டு. இது வழக்கச் சொல் மாத்திரமல்ல; நம்மை விசுவாசப்பாதையில் வழுவச் செய்யும் சொல். "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி எல்லா இடங்களிலேயும் எங்களை விளங்கப் பண்ணுகிறவர்..." (2கொரி 2:14) என்று வேதம் சொல்வதால் இந்த இடம், அந்த இடம் என்று சாக்குப்போக்குச் சொல்வது சரியல்ல. எல்லா இடங்களிலேயும் நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டும். இயேசு வனாந்திரத்தில், தனிமையில் ஜெயித்தார்.

"இயேசு வனாந்தரத்திலே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்" (மாற்கு 1:13) காட்டு மிருகங்கள் பட்சிக்கிற குணமுடையவை. ஆனால் கர்த்தரின் சமூகத்தில் வளர்ப்புப் பிராணிகள்போல் அடங்கிக்கிடந்தன. வனாந்தரம் அவரை ஆளுகை செய்யவில்லை. அவர் வனாந்தரத்தை ஆளுகை செய்தபடியால் "அவரது ஆட்சியில் ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும், கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும்" (ஏசா 1:16) என்ற வார்த்தையின்படியே காட்டு மிருகங்கள் தீமை செய்யாமல் இருந்தன.

ஒரு நாடகத்தில் ஒரு கொடியவன் கூறுவான், ‘‘பாம்பு படமெடுக்காமலிருந்தால், புலி ஆட்டை விழுங்காதிருந்தால், சிறுத்தை மனிதன் மீது பாயாமலிருந்தால் நானும் தீங்கு செய்யமலிருப்பேன்’’. ஆனால் இயேசு கிறிஸ்துவுக்குள் துர்க்குணங்கள் மாறிவிடும்.

பட்டயத்தை எடுக்கும் செலாத்தே இன யூதனும், ரோமருக்கு அடிமை வேலை செய்யும் ஆயக்காரனும் தெருவில் சந்தித்தால், ஆயக்காரன் செலாத்தேயின் பட்டயத்திற்கு இரையாவான். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஆயக்காரனான மத்தேயுவும் சீமோன் என்ற செலாத்தேயும் பாசமான சகோதரர்களாக இருந்தார்கள். இந்த அற்புதக் காட்சியின் ஒரு படப்பிடிப்புதான் இயேசுவின் வனாந்தர வாழ்க்கை.

சூழ்நிலை உன்னை ஆளக்கூடாது. நீ சூழ்நிலையை ஆள வேண்டும். இதுதான் வனாந்தரத்தில் இயேசு நமக்குக் கற்றுத்தரும் பாடம். கிறிஸ்து உன்னை ஆளுகைச் செய்தால் நீ தேள்களையும் சர்ப்பங்களையும் மிதிப்பாய். ஆம்! இருண்ட சாம்ராஜ்ஜியத்தின் அந்தகார சக்திகளை நீ மிதிப்பாய். அல்லேலூயா!

சாத்தானை இயேசு ஜெயித்தவுடன் தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தார்கள். உன்னைக் காக்கும் தேவதூதர்கள் உன்னைச் சுற்றிலும் பாளையம் இறங்குவார்கள். எப்பொழுது? நீ பிசாசை எதிர்த்து நிற்கும்பொழுது.

6. சோதனையின் நேரம் :

தனிமையின் நேரம் கொடுமையானது. மனிதனின் தனிமை நேரங்களை ஆவியானவர் தொடாவிட்டால் தனிமையின் நாயகர்கள் தீவிரவாதிகளாக, சமூக விரோதிகளாக மாறிவிடுகின்றனர். பின்லேடன், சதாம் உசேன், இமாம் அலி, சந்தனக்கடத்தல் வீரப்பன்... இவர்களெல்லாரும் கடவுளால் தொடப்படாத தனிமையின் சாம்ராஜ்ஜியங்கள்.

இயேசு தனிமையில் இருந்தார்; ஆனால் எப்பொழுதும் பிதாவோடிருந்தார். You may be alone, but not lonely. நீங்கள் தனிமையில் இருக்கலாம்; ஆனால் தனித்து இருக்கக்கூடாது. எப்பொழுதும் ஆவியானவரோடு இருங்கள். “இயேசுவும் நானும்” என்றே எப்பொழுதும் நாம் இருப்போமாக “நானும் பிதாவும்” என்றே இயேசு வாழ்ந்தார்.

கர்த்தரோடு தனிமையில் இருப்பது மிகவும் ஆசீர்வாதமுள்ளது. அரபு மண்ணில், வனாந்தரத்தில் பவுல் தன்மையில் இருந்தார். அவரது தனிமை இயேசுவைக் கற்கும் பாடசாலையாயிற்று.

“கடவுள் நம்மை வனாந்தரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் பட்சமாகப் பேசுவார்.” (ஓசி 2:14) வறுமை, நோய், ஏமாற்றம் என்று பல வனாந்தரங்களுக்கு நம்மை அழைத்துக்கொண்டு போய் நம்மோடு அன்பாக ஆண்டவர் பேசுவார்.

Solitude is good to heart: but bad to mind. தனிமை இதயத்திற்கு நல்லது. ஆனால் மனதிற்கு மிகவும் கெட்டது. ஏனெனில் வெறுமையான மனது சாத்தானின் தொழிற்கூடமாகிவிடும்.

7. சோதனையில் வெற்றி :

இயேசு கடவுளின் மைந்தனாக இச்சோதனையை ஜெயிக்கவில்லை. மனுஷகுமாரனாய் இருந்தும் வேதவசன பலத்தால் அவர் சாத்தானை ஜெயித்தார். ஆகவே நீயும் பிசாசை ஜெயிக்க முடியும். ‘‘அப்படி எழுதியிருக்கிறதே’’ என்று வேதவசனங்களைச் சாத்தானுக்கு விரோதமாக சுட்டிக்காட்டினார் இயேசு. அவரே நித்திய வார்த்தையாயிருந்தும் வேதவாக்கியங்களை மதிக்க அவர் தவறவேயில்லை.

கடவுள் தன் வார்த்தைகளை மறைக்கவும் மாட்டார்; மறுதலிக்கவும் மாட்டார். ஆகவே சோதனை நேரங்களில் அந்த வார்த்தைகளில்தான் அடைக்கலம் தேடவேண்டும். எழுதப்பட்ட வார்த்தைகளை ஞாபக சக்தியினால் அள்ளி எடுத்து சாத்தானிடம் இப்படி எழுதியிருக்கிறதே என்றால் அவன் பயப்படமாட்டான், உன்னை விட்டு விலகவும் மாட்டான். ஆவியானவர் மீண்டும் ஒருமுறை அந்த வசனத்தின் மீது அசைவாட வேண்டும். அப்பொழுது வார்த்தை எலியாவிற்கு உண்டானதுபோல் உனக்கும் உண்டாகும். அந்த வார்த்தைகளில் அடைக்கலம் தேடு; ஆசீர்வாத மழை பெய்யும்.

உன் வாழ்க்கையில் வனாந்தரங்களைச் சந்திக்கலாம். அந்த வனாந்திர நேரங்களில் சாத்தான்

உங்களை சிந்தனை உப்பரிக்கையில் உலாவ விடலாம். தேவசித்தம், கடவுளின் வார்த்தை ஆகிய இவைகளினின்று சுயசித்தம், மனித வார்த்தை என்னும் பள்ளத்தாக்குகளில் குதித்துவிடு என்று சோதிக்கலாம்.

கடவுள் படைத்த மிருகங்கள் ஊர்வன, பறப்பன இவைகளெல்லாம், "அவர் ஏற்ற வேளையில் ஆகாரத்தைக் கொடுக்கிறீர் என்று உம்மை நோக்கிக் காத்திருக்கும்; அவர் கொடுக்க அவைகள் வாங்கிக்கொள்ளும் அவர் தம்முடைய கையைத் திறக்க அவைகள் நன்மையால் திருப்தியாகும்" என்று சங்கீதம் முழங்குகிறதே, நீ அவரை நோக்கிக் காத்திருக்கிறாயே, உனக்குக் கிடைத்ததா? உனக்கு அவர் கொடுத்தாரா? உனக்காகத் தன் கையைத் திறந்தாரா.. என்று சாத்தான் கேட்டால் சோர்ந்துப் போகாதே. "அவருடைய வார்த்தைகளை ஆவியால் கண்டுபிடிப்பேன்; அவைகள் எனக்கு ஜீவனும் என் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாய் இருக்கும்" என்று பதில் சொல்.

என்னைப் பணிந்துக்கொள் என்று சாத்தான் சந்தர்ப்ப பொற்சிலைகளாக மாறி உனக்குக் கட்டளையிடுவான். உயர்ந்த வேலை, நல்ல சம்பளம், அழகாக வாழ்க்கைத் துணை என்று உனக்கு வாக்களிப்பான். "எங்களை உண்டாக்கிய எங்கள் கர்த்தராகிய இயேசு எங்களுக்கு எல்லாவற்றையும் தரவல்லவர்; அப்படி தராமற்போனாலும் உன்னை நாங்கள் பணிந்துக்கொள்ளவே மாட்டோம்" என்று உறுதியாக இருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

“அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய் தேவாலயத்து உப்பரிக்கையின்மேல் அவரை நிறுத்தி, நீர் (கடவுளுடைய) தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும். ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு... கட்டளையிடுவார்” என்று சோதித்தான். அது வனாந்தரத்து சோதனைதான். சாத்தான் இயேசுவைப் பரபரப்பு ஊழியத்திற்கு ஆயத்தமாக்க திட்டமிட்டான்.

அந்தகார உலகத்தின் மடியில் பரபரப்பு நாவல்கள் எத்தனையோ மயிர்சிலிர்க்கும் கதைகள். ஆனால் இவைகளினால் உலகிற்கு என்ன லாபம்? இன்றைய டி.வி தொடர்களில் எத்தனை பரபரப்பு ஒளிபரப்புகள்! ஆனால் உலகமோ ஆன்மீகத் தாகம் தீர்க்கப்பட ஆவலாய்க் காத்திருக்கிறது.

உலகக் காவியங்கள் நிஜமல்ல; நிழல். உலகமே ஒரு வனாந்தர நெடுஞ்சாலை. மனிதன் விடாய்த்து நடக்கிறான். அவனுக்கு உயிரோட்டம் கொடுக்க சினிமா, நாடகம், விழா, கொண்டாட்டம்... இவைகளால் அவன் ஆத்ம பசியைத் தீர்க்கமுடியுமா? உலகம் ஆலயங்களை எட்டிப்பார்க்கிறது. சிலைகள், பூஜைகள், தீபாராதனைகள் எல்லாமே கற்பூர புகையில் மறைந்து விடுகின்றன. கோயில்கள் வெற்றிடங்களாகவே இருக்கின்றன.

கிறிஸ்தவ ஆலயங்களில் கெம்பீரமானப் பிரசங்க மேடை, சத்திய வலுவற்ற பிரசங்கங்கள். இன்னிசையில் பாடலின் முழக்கம், உண்மையில் கருத்தில்லா கவிதைகள்! ஆனாலும் ஒரே பரபரப்பு!

மாபெரும் கூட்டம், வண்ண விளக்குகள், அலங்கார மேடைகள். பாரமுள்ள ஒரு ஆத்துமா பெருமூச்சோடு சொல்கிறது, "இயேசு நாதர் மட்டும் வரவில்லை என் இனிய இந்தியாவே".

இப்பொழுது சாத்தான் இயேசுவின் சிந்தனையைத் தொடுகிறான். தேவாலயத்து உப்பரிகையிலிருந்து குதித்தால் ஒரே பரபரப்பாக இருக்கும். அந்தப் பரபரப்பை அஸ்திபாரமாக்கி இயேசு தன் ஊழியத்தை அதன்மீது கட்டிவிடலாம் என்பது சாத்தானின் திட்டம். ஜனங்களின் உணர்வைத் தூண்டுவது, நகரத்தில் பரபரப்பைத் தூண்டுவதே சாத்தானின் நோக்கம்.

அவனது உள்ளான நோக்கம் இயேசு சாகவேண்டும். அதோடு அவரது ஊழியமும் சாகவேண்டும். எப்படி? இயேசு சிலுவையை மறக்க வேண்டும், இயேசு உப்பரிகையிலிருந்து குதித்துவிட்டார் என்று எல்லோரும் புகழ, அந்தப் புகழ்ச்சியில் மக்களின் இதய சிம்மாசனத்தில் ஏறிவிடலாம் என்ற குறுக்கு வழியை சாத்தான் காட்டினான்.

இன்று அனேக ஆவிக்குரிய சபைகளில் அன்னிய பாஷைகளின் ஆரவாரமும் கைதட்டலும் உணர்ச்சியால் நிறைந்து தோற்றமளிக்கிறது. ஆனால் ஆவிக்குரிய கனி கொடுப்பதில் எருசலேம் செல்லும் வழியில் நின்ற அத்திமரம் போலிருக்கிறது. Noise is not power, mere sound is not truth. பேச்சு பலம் அல்ல,

சத்தம் சத்தியமல்ல என்பதைச் சபைகள் உணர வேண்டும்.

“அதோ இயேசு நிற்கிறார்.... ஒவ்வொரு துளி இரத்தமும் உன் மேல் விழுகிறது... உன்னருகே அவர் வருகிறதை நான் காண்கிறேன்... இந்த மைதானம் முழுவதும் பரலோகத்திலிருந்து இரத்தத்துளிகள் விழுகின்றன...” இப்படி நற்செய்திக் கூட்டத்தில் கேட்கிறோம். ஆனால் வேதம் சொல்வதைக் கேளுங்கள், “கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது, தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!” (எசே 13:3)

இரத்தம் ஆத்துமாவில் விழாமல் தரையில் விழுவதால் என்ன லாபம்? இயேசுவின் இரத்தம் இன்று தரையில் விழாது. இப்படி வீண் பரபரப்பு பிரசங்கத்தினால் சாத்தான் ஊழியக்காரனையும் மக்களையும் வஞ்சிக்கிறான்.

மரணத்தை அணைக்கும் வேளையில் இயேசு ஸ்தேவானுக்குத் தரிசனமானார். சில நிமிடங்களில் இரத்த வெள்ளத்தில் மரிக்கப்போகும் தாசனுக்காகக் கர்த்தர் அவசரமாக வானத்தைத் திறந்தார். காரணமின்றி, அவசியமின்றி, அர்த்தமின்றி ஒருவனுக்குக் கர்த்தர் தரிசனமாக மாட்டார்.

சாத்தான் நம்மைப் பரபரப்பு மலைக்கு அழைத்துச் செல்ல ஆவலாயிருக்கிறான். தாவீதை உப்பரிகையிலே உலாவவிட்டு உணர்வுக்கு அவனைப்

பலியாக்கிய சாத்தான், தாவீதின் குமாரனை ஆலய உப்பரிகையிலே உலாவ விட்டு ஊழியத்தைச் சிதைக்கத் திட்டமிட்டு தோற்று ஓடிப்போனான்.

இந்நாட்களில் ஒரு அன்பான வேண்டுகோள்! அஞ்ஞானிகளின் ஆவியில் கிறிஸ்துமஸ்ஸைக் கொண்டாடாதீர்கள். Christmas – Christ Miss என்று ஆகிவிடக்கூடாது. நமது மகிழ்ச்சி ஆலயம் அல்ல, அதில் வீற்றிருக்கிற ஆண்டவரே.... அழகானப் புது வேதப்புத்தகம் அல்ல, வேத சத்தியங்களே.... கிறிஸ்துமஸ் விழா அல்ல, கிறிஸ்துவே! நாம் இப்பொழுது வனாந்தரத்திலிருக்கும் இயேசுவிடம் செல்வோம்.

ஆலய உப்பரிகையில் இயேசுவோடு

ஒரு எண்ணம் இயேசுவை ஆலய உப்பரிகைக்குக் கொண்டு போனது. எழுநூறு அடி உயரமுள்ள அந்த உப்பரிகையிலிருந்து தாழக்குதிக்கும்படியான ஒரு எண்ணத்தைச் சாத்தான் கொடுத்தான். உடனே இயேசு அதை எதிர்த்தார். நமக்குப் பல்வேறு எண்ணங்கள் உண்டாகின்றன. அவைகளில் சில தெய்வீக எண்ணங்கள், சில சாத்தானின் எண்ணங்கள், சில பொதுவான எண்ணங்கள்.

இந்தப் பொது எண்ணங்களில் சாத்தான் தன் நோக்கங்களை நிறைவேற்றிவிடுவான். அழகானப் பெண் என்ற சாதாரண எண்ணம் ஆசையாய் மாறி அது வேட்கையாய் உருவாகி, இச்சை எனும் நிலை அடைந்து, பாவமாகி விடுகிறது. ஆகவே நம் எண்ணங்களில் சாத்தான் விளையாடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

பாவமில்லா அனேகக் காரியங்கள் சாத்தானின் களங்களாக மாறிவிடும். ஒரு இன்பச்சுற்றுலா, நண்பனின் வீட்டிற்குப் போகுதல், மாலை உலா போன்றவைகள் ஆவியானவரின் ஆளுகைக்கு

வெளியே இருந்தால் அவைகள் வாழ்க்கையில் பெரும் பிரச்சனைகளாகிவிடும்.

நான் மாணவனாக இருக்கும்பொழுது, கந்தசாமி என்ற நண்பனிடம் பழகினேன். அவன் தந்த ஒரு புத்தகம் என் வாழ்க்கையை முற்றிலும் பாதித்து விட்டது. அந்தப் புத்தகத்தை வாசிக்கும்பொழுது எனக்கு 14 வயது. என்னுடைய 28 ஆம் வயதுவரை என்னை அந்தப் புத்தகம் ஒரு நாத்திகனாக மாற்றிவிட்டது.

ஒரு சிறு சம்பவம் நம் வாழ்க்கையை மாற்றிவிடும்படி சாத்தான் கிரியைச் செய்வான். ஆகையால் எச்சரிக்கையாயிருங்கள். ஒரு மலைமீது மோதி நாம் கீழே விழமாட்டோம், ஒரு கல் தடுக்கி நாம் கீழே விழுந்து விடுவோம். ஆகவே சிறுசிறு சிந்தனைகளிலும் எச்சரிக்கையாயிருப்போம். இயேசுவோ சாத்தான் கொடுத்த எண்ணத்தை உடனே தூர எறிந்தார்.

2. உறவைத் துண்டிக்க முயற்சி :

“நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்” என்று பிதா, குமாரன் உறவில் சாத்தான் விளையாட ஆரம்பித்தான். நமது கர்த்தருக்கும் நமக்கும் உள்ள உறவை உடைக்கவே சாத்தான் எப்பொழுதும் முயற்சி செய்துக் கொண்டே இருப்பான். இயேசு வேத வசனத்தை முந்திய சோதனை வேளையில் சுட்டிக்காட்டினபடியால் இப்பொழுது சாத்தானே முந்திக்கொண்டு வேதவசனத்தைச் சுட்டிக்காட்டுகிறான். இயேசு

வேதவசனத்தைச் சுட்டிக்காட்டும்பொழுது அங்கு அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற வசனமிருந்தது.

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வார்த்தையினாலும் பிழைப்பான்." (உபா 8:3) இதுதான் இயேசு சாத்தானுக்குக் காட்டிய பொருத்தமான வேதவசனம். சாத்தான் பொருத்தம் இல்லாமல் ஒரு வசனத்தைச் சுட்டிக்காட்டினான். A text out of context is pretext! வேதத்தை அஜாக்கிரதையாகக் கையாளாதீர்கள்.

சென்னையில் ஒரு சபையில் ஒரு விசுவாசி ஒரு சாட்சி சொன்னார். "என் பக்கத்து வீட்டுக்காரன் மிகுந்தத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். நானும் பொறுமையுடன் இருந்தேன். ஒருநாள் அவனது தொல்லை மிகவும் அதிகமாகிவிட்டது. அவனை அடித்து விடலாமென்று எண்ணினேன், ஆனால் திடீரென்று ஒருவன் மேல் கைகளை வையாதே என்ற வசனம் எனக்கு ஞாபகம் வரவே நான் அமைதியாகி விட்டேன்." பாருங்கள்! கைகளை வைக்காதே என்ற வசனத்தை அவர் எப்படித் தவறாகப் பயன்படுத்தினார் என்று.

சாத்தான் எப்பொழுதும் வேத வசனத்தைத் தவறாகவே பயன்படுத்துவான். "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (1பேதுரு2:24) என்பது ஆவிக்குரிய குணமாகுதலாகிய இரட்சிப்பையே குறிக்கும். ஆனால் இன்று இந்த வசனம் சரீர சுகமாகுதலைக் குறிப்பதாகவே பிரசங்கிக்கப்படுகிறது.

மேலும் ஏசா 56:5ல் “என்றும் அழியாத நித்திய நாமத்தை அண்ணகர்களுக்கு அருளுவேன்” என்பது இஸ்ரவேலில் உள்ள அண்ணகர்களைப் பற்றியே பேசுகிறது. இன்று இந்த வசனம் ஒரு குறிப்பிட்ட சபையில் திருமணமாகாத ஊழியக்காரர்களுக்குக் கடவுள் தரும் மிகப்பெரிய சிலாக்கியம் என்று மிகவும் தவறாகப் பிரசங்கம் பண்ணப்படுகிறது.

உப்பரிகையிலிருந்து இயேசு குதித்துவிட்டால் பிதா அவரைத் தேவதூதர்களின் கரங்களினால் பாதுகாத்து விடுவார் என்று தவறான ஒரு விளக்கத்தைச் சாத்தான் கொடுத்தான். இயேசுவோ வேதவசனத்தைக் கொண்டு அவனைத் துரத்தினார்.

இன்று வேதவார்த்தையைத் தவறாகப் பயன்படுத்துவதால் கர்த்தரின் நோக்கம் நிறைவேறாமல் போகிறது. நீங்களோ வேதவாக்கியங்களைக் குறித்து விழிப்புடனிருங்கள்.

3. வேதத்தின் தவறான விளக்கம் : (சங் 91:1)

சாத்தானுக்கு வேதவசனங்கள் நிறையத் தெரியும். நம் தலைகள்கூட வேதவசனங்களால் நிறைந்திருக்கலாம். ஆனால் இருதயம் அவைகளால் நிறைந்திருக்க வேண்டும்.

இயேசுவிடம் சாத்தான் வேதவசனத்தை முழுமையாகச் சொல்லவில்லை. உன் வழிகளிலெல்லாம் என்கிற பகுதியைத் துண்டித்து மற்றப் பகுதியை மட்டும் குறிப்பிட்டான். உப்பரிகையிலிருந்து கீழே குதிப்பது பிதா

இயேசுவுக்குக் கொடுத்த வழி அல்ல. உன் வழி என்று அவர் சொல்வது அவரது சித்தம், கட்டளை இவைகளையே குறிக்கும்.

மேலும், ‘‘உன் பாதங்கள் கல்லில் இடறாதபடி’’ என்கிற வார்த்தை உன் பாதங்கள் தடைகளைத் தாண்டிப்போகும், தேவதூதர்கள் தடைக் கற்களை நமது இரட்சிப்பின் பாதையிலிருந்து நீக்கி பரம வீட்டிற்கு நம்மை ஏந்திச் செல்வார்கள் என்பதே பொருள்.

நகோமி மோவாபிற்குப் போனது கடவுள் குறித்த ‘உன் வழி’ அல்ல. ஆபிரகாம் எகிப்துக்குப் போனது கர்த்தர் கொடுத்த ‘உன் வழி’ அல்ல என்று கர்த்தர் சொல்வதை நாம் மிகவும் தெளிவாக அறிய வேண்டும்.

வேதவசனம் கடவுளைச் சோதிப்பதற்காகக் கொடுக்கப்படவில்லை. வேதவார்த்தைகளில் மறைந்து இருக்கும் ஜீவனையும் ஆவியையும் கண்டுபிடியுங்கள். மேலோட்டமாக வேதவார்த்தைகளைப் பின்பற்றாதீர்கள். கடவுள் நமக்கு வாக்களித்ததற்கு மேலாக நாமே நமக்கு வாக்களித்து விடாதபடி வேதத்தைக் கவனமாய்க் கையாளுவோம்.

4. சாத்தானின் முட்டாள்தனம் :

‘‘தாழக்குதியும்’’ என்று சாத்தான் இயேசுவிற்கு ஆலோசனைக் கூறுகிறான். ஏற்கனவே அவர் பரலோகிலிருந்து மனுவுருவில் தாழக்குதித்த கடவுளின் குமாரன்தானே. இன்னும் எங்கு தாழ வேண்டும்?

தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலாக இயேசு வந்ததே தாழக்குதித்ததில்லையா?

சாத்தான், இயேசுவை "சிலுவையிலிருந்து இறங்கும், தாழக்குதியும்" என்று கூக்குரலிடவில்லையா? எப்பொழுதும் பரபரப்பான காரியத்தையே செய்ய சாத்தான் தூண்டுகிறான். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தால் அவரைத் தேவகுமாரன் என்று மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சிலுவையிலிருந்து தாழக்குதித்தால் உடனே அவரைத் தேவகுமாரன் என்று ஏற்றுக்கொள்வார்கள் என்று சாத்தான் தூண்டினான்.

அப்படி அவர் செய்தால் சிலுவையில் மரித்தார் என்பதைவிட சிலுவையிலிருந்து குதித்தார் என்றால் எருசலேமை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடலாமே என்பதே சாத்தானின் திட்டம். இயேசு அப்படி செய்திருந்தால் பிதாவின் சித்தம் நிறைவேறியிருக்காது.

ஆனால் இயேசு ஏற்கெனவே பிதாவின் சித்தப்படி தாழக்குதித்தவர்தான் என்பதை சாத்தான் நினைக்காதது அவனது அறியாமை. தன் பலியினால் மனிதனைப் பாவச் சேற்றினின்று தூக்கி எடுக்க தம்மையே ஒப்புக்கொடுத்தது தாழக்குதித்தாகாதா? இதுதானே அவரது அன்பின் ஆழம்.

சாத்தான் நம்மை ஒன்றில் சோர்வில் ஆழ்த்துவான். இல்லையெனில் துணிகரத்திற்குத் தள்ளுவான். இயேசுவை அவன் துணிகரத்திற்குத்

தள்ள முயற்சித்தான். ஆகவே நீங்கள் மிகவும் விழிப்புடன் இருங்கள்.

5. தாழக்குதியும் :

சாத்தான் தாழக்குதியும் என்று இயேசுவைத் தூண்ட முடியுமே தவிர அவரை அவனால் தள்ளிவிட முடியாது. ஆம்! நீங்கள் இடம் கொடுக்காமல் அவன் உங்களுக்கு ஒன்றுமே செய்யமுடியாது. கடவுள் ஒருவனைத் தாழ்த்தினால் நிச்சயமாய் அவனை அவர் உயர்த்துவார். யோசேப்பைக் குழியில் தள்ள கர்த்தர் அனுமதித்தார், ஆனால் அவரே அவனை சிங்காசனத்திற்கு உயர்த்தினார். சாத்தான் ஒருவனை உயர்த்தினால் நிச்சயமாய் அவனே அந்த மனிதனைக் கீழே தள்ளுவான். ஆமானைச் சாத்தான் உயர்த்தி கடைசியில் அவனைக் கீழே தள்ளினான். யேசபேலை சாத்தான் உயர்த்தினான், அவள் சொன்னதே சட்டம், அவளின் நாவசைப்பில் நான்கு திசைகளிலும் எத்தனையோ மாற்றங்கள்! கடைசியில் அவள் தாழத் தள்ளப்பட்டாள். உடல் சிதறி மாண்டாள்.

சாத்தான் உங்களை உயர்த்தாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். லஞ்சம் கொடுத்துப் பதவி உயர்வோ, பதவி பெறுவதோ சாத்தான் உயர்த்துவதே. பணம் கொடுத்து வாக்குகளைப்பெற்று அமைச்சர் பதவியில் அமர்வது சாத்தான் உயர்த்துவதே. அப்படிப்பட்ட பதவிகளைத் தந்த சாத்தான் திடீரென்று தாழக்குதி என்று கட்டளையிடுவான்.

6. சோதனையின் இடம் :

பரிசுத்த நகரத்தில் இயேசு சோதிக்கப்பட்டார். நகரத்தில் இப்படியொரு நிகழ்ச்சி ஏற்பட்டால் அது மக்களின் கவனத்தை ஈர்க்கும். வனாந்திரத்தில் இருந்த இயேசுவிடம் இப்படி நகரத்தின் காட்சியைச் சாத்தான் காட்டினான். தேவாலயத்தின் உப்பரிகையில் கடவுளை எண்ணித் துதிக்கும் வேளையில் சாத்தானின் எண்ணம் ஊடுருவப் பார்த்தது. ஆனால் கர்த்தர் உடனே அந்த எண்ணத்தைத் தடுத்துவிட்டார்.

ஒரு குறிப்பிட்ட இடம்தான் நமக்குச் சோதனையைத் தருகிறது என்பது எப்பொழுதும் சரியாகாது. ஏதேன் தோட்டத்தில் அழகானச் சூழலில் ஆதிப் பெற்றோர்கள், பரிசுத்தத்திலிருந்து தாழக்குதித்து சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து விட்டனரே. சபையில் உட்கார்ந்து ஆராதிக்கும் வேளையில் தீமையான எண்ணங்கள் உண்டாகலாம். உடனே அவைகளைத் துரத்தி விடுங்கள். இல்லையெனில் அவைகள் உங்களைக் கடவுளிடமிருந்து துரத்திவிடும் நான் ஆராதனையில்தானே இருக்கிறேன் என்று அஜாக்கிரதையாயிராதேயுங்கள்.

7. உப்பரிகை தவறான இடம் :

இரட்சிப்பைச் சம்பாதிக்க இயேசு நகரவாசலுக்கு வெளியே சென்று பாடுபடுவதே பிதாவின் சித்தம். நகரத்துக்குள் சென்று பாராட்டப்படுவதே சாத்தானின் நோக்கம். அவர் மேசியாவாக ஆவதற்கு சிலுவை வழியாய்ச் செல்ல வேண்டும். ஆம்! அவர் சிலுவையில் உயர்த்தப்படுவதே

பிதாவின் சித்தம். ஆலய உப்பரிகைக்கு உயர்த்தப்படுவதே சாத்தானின் நோக்கம்.

திருவிருந்து வேளையில் யூதாஸிடம் சாத்தான் புகுந்தான். காணிக்கை செலுத்தும்பொழுது சாத்தான் அனனியா, சப்பிராளைப் பொய் சொல்ல வைத்தான். ஆகவே ஆராதனை வேளையிலும் எச்சரிக்கையாயிருங்கள். தேவாலயத்து உப்பரிகையிலும் சோதனைக்கு இடமுண்டு. உப்பரிகை சிலுவைக்கு மாறானது, எதிரானது. சாத்தான் தவறான இடத்திற்கே நம்மை எப்பொழுதும் அழைத்துச்செல்வான். எகிப்தில், பாவத்தில் இருந்துக்கொண்டே கர்த்தரைத் தொழு என்பது சாத்தானின் தவறான யோசனை.

அவரைச் சிலுவையிலிருந்து சிங்காசனத்திற்குக் கொண்டு போவதே பிதாவின் சித்தம். உப்பரிகையிலிருந்து என்பது சாத்தானின் தீய நோக்கம்.

“கர்த்தரின் பலத்த கரத்தில் அடங்கியிருங்கள். ஏற்ற வேளையில் கர்த்தர் உங்களை உயர்த்துவார்.” (1பேதுரு 5:6) ஒருபோதும் சாத்தானுக்கு இடம் கொடுக்காதீர்கள். அவன் உங்களை உயர்த்தி தாழத்தள்ளுவான்.

மலை உச்சியில் இயேசுவோடு

(மத். 4:8-10)

இந்த மலை உச்சியில் சாத்தான் தொழுகையைப் பறித்துக்கொள்ளத் திட்டமிட்டான். தன்னைப் பணிந்துக்கொள்ளும்படி நமது கர்த்தரை சாத்தான் தூண்டினான். சாத்தான் கடவுளாக மாற விரும்பினான். கடவுள் உருவாக்கப்படுகிறவர் அல்ல; ஏற்கனவே இருப்பவர். (God is not becoming but is Being) இயேசுவிற்குப் பதிலாக எதனை வணங்கினாலும், தெய்வமாக நம்பினாலும் அது விக்கிரக ஆராதனை. மலை உச்சியில் கர்த்தரையே தன்னைத் தொழும்படி தூண்டினான் சாத்தான். இப்படி கர்த்தரையே சோதிக்கும்படி சாத்தான் கையாண்டது பொருளாசையைத் தூண்டும் முயற்சியில்.

எதை உண்போம், எதைக் குடிப்போம் என்று உலகப் பொருள்களையே நாடி ஓடுவோர் அஞ்ஞானியின் ஆவியில் கர்த்தரையே சோதித்தான். இந்தச் சோதனைப் பின்னணியில் சில சத்தியங்களைப் பார்ப்போம்.

1. சோதனையின் இடம் :

இயேசு தாமே எருசலேம் நகரத்தைப் பார்வையிடும்படி மலை உச்சிக்குச் சென்றிருக்கலாம். அப்பொழுது சாத்தான் கர்த்தரைச் சோதிக்கும் எண்ணத்தில் அங்கு வந்திருக்கலாம். (இயேசுவை அவன் தூக்கிக்கொண்டுப் போயிருக்க முடியாது) இயேசுவின் சிந்தனையில் அவன் ஓர் சோதனையைக் கொண்டு வந்திருப்பான்.

சகோதரனே, சகோதரியே! சாத்தான் உங்கள் சிந்தனைகளோடு விளையாட முற்படுவான். நீங்கள் அவனது உபாய தந்திரங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

எதிரிகள் கப்பலைத்தாக்க நினைத்தால் கப்பலின் புகைக் கூண்டைத்தாக்க முயற்சிக்க மாட்டார்கள். கப்பலும் தண்ணீரும் தொட்டுக்கொண்டிருக்கும் இடத்தைக் குண்டுகளால் தாக்குவார்கள். அப்பொழுதுதான் தண்ணீர் கப்பலின் உள்ளே பாய்ந்து கப்பலையே தண்ணீருக்குள் ஆழ்த்தி விடும். அதுபோல விசுவாசி எவ்விடத்தில் உலகோடு இணைந்துபோகிறானோ அந்தச் சூழ்நிலையைச் சாத்தான் பயன்படுத்திக்கொள்வான். ஆகவே உலகத் தொடர்பைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

யூதாவின் இராஜாவாகிய யோசபாத் கர்த்தருக்கென்று மிகவும் வைராக்கியமாயிருந்தான். ஆகாப் தன்னைப் போன்று ஓர் ராஜாவாக இருந்தபோதிலும் அவனுக்கு எதிராகவே யோசபாத் செயற்பட்டான். காரணம் என்னவென்றால் ஆகாப்

இஸ்ரவேலின் கடவுளுக்கு விரோதமாக நடந்துக் கொண்டதே. யோசபாத் ராஜாவாகி இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலப்பட்டான். (2 நாளா 17:1)

ஆகாப் இஸ்ரவேலன் அல்லவா? தன் இனத்தான் அல்லவா என்று உறவைப் பார்க்காமல் அவனுடைய ஆவிக்குரிய நிலை மிகவும் தாழ்ந்துப்போய் விட்டபடியால் யோசபாத் அவனுக்கு விரோதமாக எழுந்தான். அவர்களும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் தானே. அவர்களும் நமது பைபிளைத்தானே படிக்கிறார்கள் என்று அவிசுவாசிகளோடு எவ்வளவு சீக்கிரமாய் ஐக்கியம் கொள்கிறோம்? உலக சினேகம் கடவுளுக்கு விரோதமான பகையில்லையா?

இப்படி யோசபாத் கடவுளுக்காக வைராக்கியமாக இருந்தபடியால் கடவுளும் அவனை ஆசீர்வதித்தார். கர்த்தர் அவன் கையில் அரசாட்சியைப் பலப்படுத்தினார். யூதா கோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். அவனுக்கு ஐசுவரியமும், கனமும் மிகுதியாயிருந்தன. (2 நாளா 17:5) மாம்சீக ஐக்கியத்தை அவன் வெறுத்தபடியால் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். பொன்னுக்காக, பொருளுக்காக நாம் உலகத்தை நேசித்தால் நமக்குப் பாடுகளும் பிரச்சனைகளும்தான் உண்டாகும்.

சாத்தான் உலக மேன்மைகளைக் காட்டி நம் கர்த்தரையே சோதிக்க முற்பட்டான். உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் அவைகளின் மகிமையையும்

அவருக்குக் காண்பித்தான். (மத் 4:8) இந்த மகிமையைக் கண்டு இயேசு உலகின் ராஜாவாக மாறவேண்டும் என்பதே பிசாசின் திட்டம்.

உலக இரட்சகர் என்பது பிதாவின் திட்டம். உலக ராஜா என்பது பிசாசின் திட்டம். ஆண்டவரையே உலக ஆசையில் சோதிக்கத் தொடங்கிய சாத்தான் நம்மை விட்டு வைப்பானா?

உலக வேலை, செல்வம், செல்வாக்கு இவற்றைக்காட்டி நம்மைக் கடவுளிடமிருந்து பிரிப்பதே அவனுடைய நோக்கமும் திட்டமும். உலகப் பொருளுக்காக (இம்மைக்காக) மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நாம் நம்பிக்கையாயிருந்தால் எல்லா மனிதர்களிலும் நாம் பரிதபிக்கப்பப்படத்தக்கவர்-களாயிருப்போம் என்று வேதம் சொல்கிறதே. (1 கொரி 15:19) அப்படியானால் உலகப் பொருளுக்காக கிறிஸ்துவையே விட்டுவிட்டோமானால் நம் நிலை எப்படியிருக்கும்? கிறிஸ்தவரான பின் சாதிப்பிரிவைக் காட்டி அரசாங்கத்தின் சலுகையைப் பெறுவது கிறிஸ்தவ வைராக்கியமா?

உலக மேன்மையை - இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை மலை உச்சியின் சிறப்புக்காட்சிகளாக சாத்தான் காட்டியது செழுமை உபதேசம்தானே! (prosperity Theory) பொன், பொருள், கார், பங்களா இவற்றை ஓர் கிறிஸ்தவன் வைத்திருப்பதினால் அவன் செழுமைக் கொள்கைக்காரன் என்று பொருள் அல்ல. வறுமை, அட்ட தரித்திரம், பசி இவற்றை கிறிஸ்தவத்தின்

அடையாளங்களாகக் கருத வேண்டும் என்பது தவறான உபதேசம். சிலுவையில்லாமல் சிங்காசனம் என்பது சாத்தானின் செழுமைக் கொள்கை. அதுபோல பாடுகளில்லாமல் ஆசீர்வாதம் என்பது செழுமைக் கொள்கை. இன்று பல சபைகள் இந்த நூதனக் கொள்கைகளைப் பிரசங்கிக்கின்றன. எச்சரிக்கையாயிருங்கள்!.

2. சாத்தானின் துரிதம்:

"பின்னும் பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்தான்." (லூக்கா 4:5)

எந்த மலைமேல், ஏன் எவரஸ்ட் சிகரத்தின் மேல் நின்றாலும் உலகத்தின் அனைத்து ராஜ்ஜியங்களையும் எவராலும் பார்க்க முடியாது. மனிதர் என்ற நிலையில் இயேசு கிறிஸ்துவும் அவற்றைப் பார்க்க முடியாது. ஆனால் சாத்தான் அவற்றை ஒரு நிமிடத்தில் அவருக்குக் காட்டினான். சாத்தான் எப்பொழுதும் மிகவும் வேகமாகச் செயல்படுகிறவன். அவன் எப்பொழுதும் சுற்றித் திரிகிறவன். இயேசு கிறிஸ்து தன் திட்டங்களைப் படிப்படியாக வெளிப்படுத்துகிறவர்.

ஆத்துமக் கிளர்ச்சியில் பரபரப்போடு பேசும் ஊழியக்காரரின் செய்திகள் வெறும் சொல்லலங்காரமாகவே அமைந்துவிடும். இத்தகையப் பேச்சுக்கள் காதுக்கு இனிமையாக இருந்தாலும் ஆவிக்கு எந்தப் பயனும் இல்லாமலிருக்கும். இன்றைய

கிறிஸ்தவ மேடைகள் பரபரப்பு, வேகம், துரிதமான இசை, பாடல்கள் இவற்றால் நிறைந்து மனக்கிளர்ச்சியை உருவாக்கும் காட்சியாகவே இருக்கின்றன.

ஆவியானவரின் நிதானம், அமைதி இவற்றை இன்றைய பல ஆராதனைகள் இழந்து விட்டன என்பது பரிதாபமே. சத்தியத்தைக் கர்த்தர் மெதுவாகவே வெளிப்படுத்தினார். “இன்னும் பல காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவற்றை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்” (யோவான் 16:12) என்று இயேசு சமயம் எடுத்து சரியான தருணத்தில் தன் கருத்துக்களை, நோக்கங்களை வெளிப்படுத்தினார். ஆனால் சாத்தானோ மிகவும் ஆத்திரப்பட்டு, மிக வேகமாகப் பொய்களை வெளிப்படுத்தினான். உண்மை வீட்டை விட்டுப் புறப்படுமுன், பொய் உலகையே சுற்றி வந்துவிடும் என்று ஒரு பழமொழி உண்டு. அப்படி உலகத்தைச் சுற்றி வருபவன்தான் சாத்தான். சாத்தானின் துரித செயல்கள் சிலவற்றை நாம் பார்ப்போம்.

a. ஜோதிடம் :

கோள்களின் சுழற்சியைக் கொண்டு ஜோதிடத்தின் மூலம் சாத்தான் வருங்காரியங்களை அறிவிக்கிறான். ஜோதிடத்தின் அடிப்படையே தவறானது. பூமி சுழலாமல் அப்படியே ஓர் நிலையில் இருக்கின்றது, கோள்கள் மாத்திரமே பூமியைச் சுற்றுகின்றன என்ற தவறானக் கொள்கையின்

மேலேயே ஜோதிடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது விஞ்ஞானத்திற்கு மிகவும் முரண்பட்டது. "இப்பொழுதும் ஜோசியரும் நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசை கணிக்கிறவர்களும் எழும்பி உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும்" என்று நாள், நட்சத்திரம் பார்க்கிறவர்களுக்கு வேதம் சவால் விடுகிறது. (ஏசா 47:13)

b. ஜாதகம் :

இன்று பலரது தலைவிதியை நிர்ணயிப்பது ஜாதகம். கல்வி, குணம், திறமை என்று பல தகுதிகளிருந்தும் ஜாதகத்தின் குறுக்கீடால் தெய்வசித்தம் நிறைவேறாமல் போய்விடுகின்றது. கடவுள் இணைப்பதற்குப் பதிலாக சாத்தானின் கலையான ஜாதகம் இணைகின்றது. கோள்களின் சுழற்சிகளை வைத்தே ஜாதகம் கணிக்கப்படுகிறது. கண்ணுக்குத் தெரிந்த ஏழு கோள்களை வைத்தே ஜாதகம் கணிக்கப்படுகிறது. (முன் நாட்களில் யுரேனியஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகிய கோள்கள் வெறும் கண்களுக்குத் தெரிவதில்லை) கண்ணுக்குப் புலப்பட்ட ஏழு கோள்களை வைத்தே ஜாதகம் கணிக்கப்படுகிறது. மேலும் வம்சாவழியாக, தாயின் வயிற்றில் கரு உருவாகும்பொழுதே வருங்காரியங்கள் (Hereditory Factors) உண்டாகிவிடுகின்றன. குழந்தை பிறக்கும் காலத்தில் இவை உண்டாவதில்லை. ஆகவே சாத்தானின் வெளிப்பாடு தவறு.

c. கைரேகை : (Palmistry)

சாத்தான் தன் செய்தித் தொடர்புக்கு கைரேகையைப் பயன்படுத்துகிறான். மனிதன் இயற்கையாகவே தனக்கு வருங்காலம் வைத்திருக்கும் காரியங்களை அறிய மிகவும் ஆசையாயிருக்கிறான். இந்த ஆசையை அறிந்த சாத்தான் துரிதமாக சில வெளிப்பாடுகளைக் கொடுக்க விரும்புகிறான். ஜெபம், தியானம் இவைகள் மூலம் கடவுளிடம் வெளிப்பாட்டைப் பெறக் காத்திருக்கும் பொறுமை இல்லாதவர்கள், சாத்தானின் துரித வெளிப்பாட்டை நோக்கி விரைகின்றனர்.

ஒரு மனிதனுக்கு எந்தத் தொத்து வியாதி வர வாய்ப்பு இருக்கிறது என்று கைரேகையினால் கண்டுபிடிக்க முடியாது அல்லது உடனே ஏற்படும் (imminent) விபத்தைக் கைரேகை சொல்லாது. ஒருவனுடைய பணி உயர்வு, பணிமாற்றம் இவற்றை கைரேகையினால் அறிந்துக் கொள்ளவே முடியாது. ஆனாலும் அசுத்த ஆவிகள் கைரேகையைப் பயன்படுத்தி சில வெளிப்பாடுகளைக் கொடுக்கின்றன. ஆகவே சாத்தானின் வெளிப்பாடுகள் குறைவானவை, தவறானவை. ஆனாலும் சாத்தான் தன் வெளிப்பாட்டினால் உலக மேன்மைகளைக் காட்டி இயேசுவையே வஞ்சிக்க முற்படுகிறான். ஆகவே எச்சரிக்கையாயிருங்கள்.

3. சாத்தானின் பரிசு :

“இந்த ராஜ்ஜியங்களை உமக்குத் தருவேன்” (மத் 4:9) என்று சாத்தான் இயேசுவிற்கு வாக்களித்தான். கடவுள் தராத பல ஆசீர்வாதங்களை

சாத்தான் உங்களுக்கு வாக்களிப்பான். சிலவற்றை அவனால் கொடுக்க முடியும். சாத்தானால் ஒன்றுமே செய்ய முடியாது என்று வேதம் சொல்லவில்லை. ஆனால் சாத்தானால் கூடாத காரியங்கள் பல உண்டு, கடவுளால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

உலகத்தை இயேசுவிற்குத் தருவதாக சாத்தான் வாக்களிக்கும்பொழுது அது ஓரளவிற்கு உண்மையாகவே இருந்தது. ஏனெனில் அப்பொழுதும் இப்பொழுதும் இந்த உலகத்தின் அதிபதியாக சாத்தான் இருக்கிறான். ஆனால் உலகத்தைப் படைத்த இயேசுவே உலகின் நித்திய சொந்தக்காரர் என்றாலும் சாத்தான் உலகின் ராஜ்ஜியத்தை கர்த்தருக்கு வாக்களித்தான்.

ஆனால் பிதாவோ நமது கர்த்தருக்கு மிகப் பெரிய வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார், ‘‘என்னைக் கேளும், அப்பொழுது தேசங்களை உமக்குச் சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்’’ (சங் 2:8) என்பதே அந்த வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற இயேசு சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழ வேண்டும். சாத்தானோ குறுக்கு வழியைக் காட்டினான்.

சகோதரனே, சகோதரியே! கடவுளின் சித்தத்திற்கு மாறாக சாத்தான் பல குறுக்கு வழிகளைக் காட்டுவான். மிகவும் எச்சரிக்கையுடன் இருங்கள்! பரிதானம் கொடுத்தால் நல்ல வேலை கிடைக்கும் என்பது அவனுடைய தந்திரம். அவனை

எதிர்த்து நில்லுங்கள். கர்த்தருக்கு காத்திருங்கள். இன்று சாத்தான் பரவசக் காட்சிகளைக் காட்டுவான். அவன் உங்களுக்குக் காட்டும் வெற்றியின் முகடு தோல்வியின் பள்ளத்தாக்காக மாறிவிடும். அவன் வாக்களிக்கும் சமாதானம், கலவரத்தில் முடிந்துவிடும். உலக வேட்கையில் உந்தப்பட்டு உங்கள் கண்களை உலாவ விடாதீர்கள். ஆவியில் நிறைந்து ஆண்டவரை நோக்கிப் பாருங்கள்.

சோதோமின் ராஜா ஆபிரகாமை நோக்கி, ''மக்களை எனக்குத் தாரும்; பொருள்களை நீர் எடுத்துக் கொள்ளும்'' என்று கூறினான். உடனே ஆபிரகாம், ''ஆபிரகாமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் காலணியின் வாரையாகிலும் உமக்கு உண்டானவற்றில் யாதொன்றையாகிலும் எடுத்துக் கொள்ளேன்'' என்று ஆவிக்குரிய வைராக்கியத்தை எடுத்தார். (ஆதி 14:21,22) அவர் எடுத்த ஆவிக்குரிய வைராக்கியத்தால் சாத்தானின் நோக்கம் நிர்மூலமாயிற்று.

மெல்கிசேதேக்கு என்ற ஆசாரியனிடம் அப்பம் புசித்து, திராட்சரசம் குடித்த ஆவிக்குரிய ஆபிரகாம், உலக மேன்மைகளில் மயங்கிப் போகவில்லை. சாத்தான் நமது கண்ணின் வழியாகவே பாவத்திற்கு ஒரு நெடுஞ்சாலையை அமைக்க விரும்புகிறான். Eye way is the Highway of sin என்று நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

'அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குத் தரவேண்டும்' என்று சிம்சோன் தன் தகப்பனிடம் கேட்டான். ஆவிக்குரிய அவனுடைய கண்களைச் சாத்தான் குருடாக்கி விட்டபடியால் மாம்சீகப்பார்வையில் அந்நியப் பெண்ணை அழகிற்காக மட்டுமே தெரிந்தெடுத்து இச்சையில் மூழ்கிப் போனான். கடைசியில் அவனுடைய இச்சையின் கண்களே பெலிஸ்தியரால் பிடுங்கப்பட்டுவிட்டன. ஐயோ! உங்கள் கண்களோடு உடன்படிக்கைப் பண்ணிக் கொள்ளுங்கள்.

சாத்தானின் தவறான காட்சி :

"உலகத்தின் மகிமையை அவருக்குக் காண்பித்தான்" (மத் 4:8) உலகத்திற்கு எந்த மகிமையும் இல்லை. வருத்தம், வறுமை, சஞ்சலம், பயம், திகில், மரணம் இவை நிறைந்த உலகில் என்ன மகிமை இருக்கிறது? கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு நாம் தப்பியிருக்கிறோம். அப்படியிருக்க மீண்டும் அவற்றில் சிக்கிக்கொண்டு அவை நம்மீது வெற்றி கொள்ளுமெனில் நம்முடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். (2 பேதுரு 2:20)

நம் வாழ்வின் பின்னிலைமை பாழாய்ப் போகும்படிக்கே சாத்தான் உலக அசுத்தங்களை மகிமையென்று காட்டுகிறான். பொய்யை மெய்யாகக் காட்டுவதே அவனது தந்திரம். ஆகவே சாத்தான்

மகிமையென்று காட்டும் இந்த உலகை வாஞ்சிக்காதீர்கள். “இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்க விடுவானேன். அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ப் பறந்துபோம்” (நீதி 23:5) என்ற வேத எச்சரிப்பை மறந்துவிடாதீர்கள்.

4. தொழுகையைப் பறிக்கும் சாத்தான் :

“நீர் தாழவிழுந்து என்னைப் பணிந்து கொள்ளும்” (மத் 4:9) என்று சாத்தான் நமது இரட்சகரை நோக்கிக் கூறினான். சாத்தானின் மிகப்பெரிய வாஞ்சை அவனைத் தொழ வேண்டுமென்பதே. நாம் பாவம் செய்யும் பொழுதெல்லாம் சாத்தானையே மறைமுகமாக தொழுகிறோம். ஆனாலும் வெளிப்படையாக அவனை நாம் தொழவேண்டும் என்பதே அவனது நோக்கம். இரகசியக் கிறிஸ்தவர்கள் என்பதை இன்றைய சபைகள் சகித்துக் கொள்கின்றன. ஆனால் இரகசிய “சாத்தான் பக்தர்கள்” என்பதைச் சாத்தான் சகித்துக் கொள்ளமாட்டான்.

இயேசுவையே தன்னை வணங்கும்படி துணிகரம் கொண்டான் சாத்தான். பிதாவை தள்ளிவிட்டு தன்னைப் பிதாவாக ஏற்றுக் கொள்ளும்படி சாத்தான் கூறுகிறான். “கடவுளைச் சேவிப்பது விருதா! அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறதினாலும் சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? (மல் 3:14)

இப்படி நாம் கூறும்பொழுதெல்லாம் சாத்தானை ஆராதிக்கிறோம்.

"கடவுளுக்கு என்னைத் தெரியுமா? உன்னதமானவருக்கு என்னைப் பற்றிய அறிவு உண்டா? (சங் 73:11) என்பது சாத்தானுக்கு ஆராதனையே. "நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி குற்றமில்லாமையாலே என் கைகளைக் கழுவினேன்" (சங் 73:13) என்பது சாத்தானுக்கு ஏறெடுக்கும் துதிகள். ஆகவே செயலிலும் வார்த்தையிலும் எச்சரிக்கையாயிருங்கள்.

"நான் பொன்னின்மேல் என் நம்பிக்கையை வைத்து தங்கத்தைப் பார்த்து நீ என் ஆதரவு என்று நான் சொன்னதும்.. என் மனம் இரகசியமாய் மயக்கப்பட்டு என் வாய் என் கையை முத்தி செய்ததுமில்லை" என்று பக்தன் யோபு கூறுகிறார். (யோவு 31:24-27) கையை முத்தி செய்வது என்பது இந்தக் கைபட்டால் மண்ணும் பொன்னாகும் என்று தன்னைப் புகழ்வதுதான். கைராசியை நம்புகிறவன் சாத்தானை ஆராதிக்கிறான். இவைகளுக்கெல்லாம் எச்சரிக்கையாயிருங்கள்.

5. சாத்தானின் நிபந்தனை :

"பணிந்து கொண்டால் தருவேன்" (மத் 4:9) நிபந்தனையின்றி சாத்தான் எதையும் கொடுப்பதில்லை. மழை, வெயில், காற்று இவற்றை நல்லார், பொல்லார் யாவருக்கும் கடவுள் கொடுக்கிறார். படைத்தவர் என்ற நிலையில் எல்லாரையும் பராமரிப்பவர் கடவுள். எந்த நிபந்தனையுமின்றி காப்பாற்றுகிறார். பதவி, பணம்,

செல்வாக்கு இவைகளைச் சாத்தான் தன் பிள்ளைகளுக்கு வாரி வழங்குகிறான். “துன்மார்க்கமாய் நட; துக்கமில்லாமல் இருப்பாய்” என்று சாத்தான் வாக்களிக்கிறான். “தெய்வ பக்தியாய் நடங்கள்; நீங்கள் துன்பப்படுவீர்கள்” என்று இயேசு சொல்கிறார்.

நித்திய வாழ்விற்கு நம்மை அழைக்கும் இயேசு மறுமையையே அதிகமாக முக்கியப்படுத்துகிறார். நித்திய வாழ்வைத் தேடினால் இவற்றைக் கூடத்தருவேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

இவ்வுலக ஆசீர்வாதங்களைக் கொண்டு வாழ்வை எடை போடாதீர்கள். அப்படி எடை போடுவீர்களானால் “துன்மார்க்கர் என்றும் சுக ஜீவிகளாயிருந்து ஆஸ்தியைப் பெருகுப் பண்ணுகிறார்கள், நான் விருதாவாகவே பரிசுத்தமாய் வாழ்கிறேன்” (யோபு 13:12) என்று புலம்ப ஆரம்பிப்பீர்கள். இந்தப் புலம்பலில் சாத்தான் மகிழுவான்.

6. இயேசுவின் பதில் : (மத் 4:10)

சாத்தானின் இந்தச் சோதனை கடவுளை அவமானப்படுத்தும் முயற்சி. இதுவரைக்கும் சாத்தானோடு தர்க்கம் செய்த இயேசு, இப்பொழுது “அப்பாலே போ, சாத்தானே” என்று அவனைத் துரத்தினார். தன் பிதாவுக்குரிய தொழுகையை அவன் பறித்தெடுக்க முயன்றதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஆம்! உங்கள் ஆராதனையை, ஆராதனை வேளையைப் பறிக்கும் எந்தச் சக்தியையும் உறவையும் பார்த்துச் சொல்லுங்கள், “அப்பாலே போ” என்று. வேதவசனத்தில் உறுதியாயிருங்கள், “உன் கடவுளாகிய கர்த்தருக்குப் பயந்து அவருக்கே ஆராதனை செய்வாயாக” (உபா 6:13) என்ற வசனத்தின்மேல் இயேசு உறுதியாக நின்றார். கர்த்தரின் வார்த்தையின் மேல் நீங்கள் உறுதியாய் இருந்தால் சாத்தான் வெலவெலத்துப் போவான். சாத்தானை சாத்தான் என்றே அழைத்தார். ஆம்! விரோதியே, சத்துருவே, பகைஞனே தொலைந்துபோ என்று இயேசு அவனை விரட்டினார்.

நீங்களும் பாவத்தை பாவம் என்றே சொல்லுங்கள். பலவீனம் என்ற வார்த்தைப் போர்வையினால் அக்கிரமத்தை மூடாதீர்கள். பாவத்தை கண்சாடையாய் விடாதீர்கள்.

அவனை வெளியரங்கமாகத் தோலுரித்துக் காட்டினால் அவன் ஓடிவிடுவான். இயேசு அவனை அதட்டியவுடன் அவன் அவரை விட்டு விலகிப் போனான்.

எதிர்த்து நில்லுங்கள், பிசாசு ஓடிவிடுவான். கிறிஸ்துவுக்கு எதிரான சட்டங்கள், இயக்கங்கள், பின்னணிகள் இவைகளுக்கு எதிர்த்து நில்லுங்கள். அவை துரத்துவார் இல்லாமல் ஓடி ஒளியும்; முடிவில் ஒழியும்.

ஜெப ஆலயத்தில் இயேசுவோடு

இயேசுவை நாம் பல சூழ்நிலைகளில் பார்த்திருக்கிறோம். கடற்கரையில், சமவெளிகளில், மலைகளில், காடுகளில், தெருக்களில் இங்கெல்லாம் அவரது பேச்சு, செயல் இவைகளைக் கேட்டிருக்கிறோம், கண்டிருக்கிறோம். இப்பொழுது நாம் அவரை ஜெப ஆலயத்தில் சந்திக்கப் போகிறோம்.

1. நாசரேத் ஜெப ஆலயத்தில் :

"தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார்." (லூாக்கா 4:16)

பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்த நம் இயேசு ஓய்வு நாளில் தவறாது ஜெப ஆலயத்திற்குச் சென்றார். எத்தனையோ ஆவிக்குரிய பணிகள் அவரை எதிர்நோக்கியிருந்த போதிலும் அவைகளைத் தள்ளிவிட்டு அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்றார். அவர் ஜெப ஆலயத்திற்குச் செல்லாதிருந்தால்

அவருக்கு எந்தக் குறையும் ஏற்படப்போவதில்லை என்றாலும் ஜெப ஆலயத்திற்குச் செல்வது அவர் வழக்கமாயிருந்தது. கடவுள் குறித்த நாளில், கடவுள் குறித்த இடத்தில் இயேசு இருந்தார்.

சகோதரனே! சகோதரியே! ஆராதனைக்குச் செல்வதில் தவறிவிடாதே. நமது கர்த்தர் நினைத்திருந்தால் நாசரேத்தூரில் சுகமளிக்கும் கூட்டம் என்று ஒரு சிறப்பு முகாமையே நடத்தியிருக்க முடியும். நமது கர்த்தரோ தமது விருப்பப்படி நடக்காது, பிதாவின் சித்தப்படி ஆராதனைக்குச் சென்றார்.

தேவபிள்ளையே, ஞாயிற்றுக்கிழமை ஆராதனையைத் தவறவிட்டு ஆராதனைக்குப் போகாமல் எந்த ஊழியக்காரர் நடத்துகிற முகாமிற்கோ, ஜெபக்கூட்டத்திற்கோ, கருத்தரங்கிற்கோ செல்லாதே. தன்னால் பெரிய ஊழியத்தைச் செய்ய முடியும்; எனினும் இயேசு ஆராதனைக்குச் சென்றார்.

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும் (எபி 11:25) என்று வேதம் வற்புறுத்துகிறது.

ஆராதனைக்கு ஆவலாய் வாருங்கள். நாளானது நெருங்கி வருகிறது. ஆம்! மத்திய வானில் இயேசு தோன்றும் நாளானது நெருங்கி வருகிறது. இயேசுவை நடுவானில் சந்திக்கும் அதே மகிழ்ச்சியில்,

ஆராதனையில் இயேசுவைக்காண நாமும் ஆவலாயிருக்கிறோமா?

கர்த்தர் எங்கும் இருக்கிறார்; ஆகவே என் வீட்டு தாழ்வாரத்தையே நான் ஆலயமாகக் காண்கிறேன் என்று சொல்லாதே. அவருடைய பிரசன்னத்தை நீ சரியாக உணர்வது பரிசுத்தவான்களின் கூடுகையில்தான். ஸ்தல சபையை இன்றைய ஊழியர்கள் மிகவும் அற்பமாக எண்ணும்பொழுது இயேசு நாசரேத் ஜெப வீட்டை அருமையாக எண்ணினார்.

2. இயேசு சபைக்கு வெளியே நிற்கிறார்:

(வெளி 3:20)

“இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன்.” இப்படி இயேசு வாசற்படியிலே நிற்பது இரட்சிக்கப்படாதவனின் இதய வாசற்படியில் அல்ல. சபை வாசலில் இயேசு நிற்கிறார்.

கூட்டம் நிரம்பியிருக்கும் சபை! வாசலில் இயேசு நிற்கிறார். ஏன்? நாளடைவில் விசுவாசிகளுக்கிடையிலும் பின்மாற்றம் ஏற்பட்டு விசுவாசத்தைவிட்டு விலகிப்போனதினால் கர்த்தரும் சபையை விட்டு வெளியேறிவிட்டார். ஒரு சபையை விட்டு இயேசு வெளியேறி வாசற்படியில் நிற்பது, அந்தச்சபை எவ்வளவு பரிதாபமானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

லோத்து, சோதோம் பட்டணத்தில் சாட்சியிழந்து வாழ்ந்த காலத்தில் அவன் வீட்டிற்கு வந்த கடவுளின் தூதர்களை வீட்டிற்குள் வரும்படி அன்புடன் அழைத்தான். ஆனால் அந்தத் தூதர்களோ, “அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம்” என்றார்கள். (ஆதி 19:2) சாட்சியிழந்த ஒருவனது வீட்டைவிட தெருவோரம் சிறந்தது என்று தூதர்கள் கருதியது லோத்திற்கு எவ்வளவு அவமானம்? இப்படி கடவுளும் நம்வீட்டிற்குள்ளே வரமாட்டேன் என்று சொன்னால் அது வீட்டாருக்கு எத்தனை அவமதிப்பு? சகோதரனே, உன் வீட்டிற்குள் இயேசு இருக்கிறாரா?

நீயும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறாயா அல்லது கிறிஸ்துவை விட்டு வெளியேறிவிட்டாயா? மூத்த குமாரன் வயலில் இருக்க வேண்டிய நேரத்தில் வயலில் இருந்தான்; ஆனால் வீட்டிற்குள் இருக்கவேண்டிய நேரத்தில் வெளியே நின்றான். உள்ளே போக (அவன்) மனதில்லாதிருந்தான். (லூக்கா 15:28)

இன்றும் அனேகர் ஊழிய வயல்களில் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு ஆராதிக்கும் ஸ்தல சபைகள் இல்லை. அவர்கள் வயலில் இருந்தாலும் கடவுளின் வீட்டில் இல்லை. சகோதரனே, நீயும் அனேக ஊழியங்களில் ஈடுபடலாம். ஆனால் ஞாயிற்றுக்கிழமை உன் ஆராதனை ஸ்தலத்தில் நீ இல்லாவிட்டால் நீ வீட்டிற்கு வெளியே நிற்கிறாய். (நான் முழு நேர சுவிசேஷகர்களைச் சொல்லவில்லை) இது நல்லதல்ல.

உன் ஆராதனை ஸ்தலத்தைவிட்டு நீ எங்கேயும் சென்று பிரசங்கம் பண்ணவோ, ஆராதிக்கவோ கூடாது என்று வேதம் சொல்லவில்லை. ஆனால் உன் போதகருக்குத் தெரியாமல், சபை ஒழுங்கை மதியாமல் நீ இரகசியமாய் ஊழிய வயல்களுக்குச் சென்றால் நாளடைவில் ஸ்தல சபைக்கு வெளியே நிரந்தரமாய் நின்று விடுவாய்.

மூத்த குமாரன் ஏன் வெளியே நிற்கிறான்? வயலின் வேலை செய்ய மிகுதியும் ஆசை உண்டு. ஆனால் வீட்டில் தகப்பனுக்குப் பிரியமாய் வாழ அவனுக்கு மனமில்லையே! வயலில் பயிர்கள் செழித்து வளர்வதில் அவனுக்கு இருந்த அக்கறை, தன் வீட்டில் இரட்சிப்பின் தோட்டத்தில் தன் தம்பி இரட்சண்ய மலராக மலர்ந்ததைப்பற்றி அக்கறையில்லையே!

கொழுத்த கன்றின் மீதுள்ள ஆர்வம் மெலிந்த தம்பியின் மீது இல்லையே! சிநேகிதரோடு இருக்க வேண்டும் என்ற ஆர்வம் சகோதரனோடு இருக்க வேண்டும் என்று இல்லையே! ஆகவே அவன் வீட்டிற்கு வெளியே நின்று விட்டான்.

அவன் மாத்திரமல்ல, அவன் தகப்பனையும் வெளியே கொண்டுவந்து நிறுத்திவிட்டானே. நம்முடைய மாம்சீகமான கிரியைகள் நமது பரமபிதாவை வெளியே நிறுத்திவிடுமே. ஆகையால் எச்சரிக்கையாயிருப்போம்.

3. ஏன் இயேசு வெளியே நிற்கிறார்?

உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களைத் தரும் இயேசுவை மாத்திரம் பிரசங்கித்தால் சபையில் எதிர்ப்புமில்லை, மறுப்புமில்லை. ஆனால் உலகை விட்டுப் பிரிக்கும் தெய்வீக உன்னதங்களைப் பிரசங்க மேடை அறிவித்தால், சபை மக்கள் சபையை விட்டு வெளியேறுகிறார்கள் அல்லது இயேசுவை சபையை விட்டு வெளியே தள்ளுகிறார்கள்.

அப்பத்தை அள்ளி அள்ளிக் கொடுத்த இயேசுவைச் சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள். கையில் அப்பங்களோடிருந்த இயேசுவை சிங்காசனத்தில் அமர வைத்து இராஜாவாக்க விரும்பினார்கள். ஆனால் அழிந்துபோகிற அப்பத்திற்காக அல்ல, 'நித்திய வாழ்விற்காக' பிரயாசப்படுங்கள் என்று சொன்ன இயேசுவை, 'நானே ஜீவ அப்பம்' என்று உபதேசித்த அவரை மலை சிகரத்தில் ஏற்றி கீழே தள்ளிவிட எண்ணினார்கள் (லூக்கா 4:29)

ஆழமான வேத சத்தியங்களுக்குத் தங்கள் இருதயங்களை அடைத்துக்கொண்டார்கள். இம்மைக்காக மாத்திரம் நீ கிறிஸ்துவை விசுவாசித்தால் உலகத்தின் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் நீ பரிதாபமான மனிதனாய் இருப்பாய்.

கூட்டம் நிரம்பியிருக்கும் சபை! வாசலில் இயேசு நிற்கிறார். ஏன்? நாளடைவில் விசுவாசிகளுக்கிடையிலும் பின்மாற்றம் ஏற்பட்டு விசுவாசத்தைவிட்டு விலகிப்போனதினால் கர்த்தரும் சபையை விட்டு வெளியேறிவிட்டார். ஒரு சபையை விட்டு இயேசு வெளியேறி வாசற்படியில் நிற்பது,

அந்தச்சபை எவ்வளவு பரிதாபமானது என்பதைக் காட்டுகிறது.

சத்தியம் சில சமயங்களில் உனக்கு விளங்காமலிருக்கலாம். ஆனால் நீ கேட்ட சத்தியத்தை தூக்கி எறிந்துவிடாதே. ‘‘உம் தாய்க்கும் தகப்பனுக்கும் ஏன் இப்படிச் செய்தீர்’’ என்று இயேசுவின் பெற்றோர் அவரைக் கேட்டபொழுது, ‘‘நான் என் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டாமா’’ என்று கேட்டது விளங்கவில்லை. விளங்காததினாலே மரியாள் தன் மகனின் பதிலைத் தூக்கி எறியவில்லை. அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இதயத்திலே வைத்துக் கொண்டாள். (லூக்கா 2:51)

இன்று நீ கேட்கும் சத்தியம் விளங்காமலிருக்கலாம். ஆதனால் அதை இதயத்திலிருந்து தூக்கி எறிந்துவிடாதே. நீ கேட்ட சத்தியத்தின் மேல் கடவுள் ஒருநாள் வெளிச்சத்தைத் தருவார். அந்த வெளிச்சத்தைப் பெறும்வரை சத்தியத்தை இருதயத்தில் வைத்துவை. சத்தியத்தை நீ தூக்கியெறிந்தால் சத்தியத்திற்கு வெளியே நீ நின்றுவிடுவாய். சத்தியமாகிய இயேசுவையும் வெளியே நிறுத்திவிடுவாய்.

4. கற்றுக்கொள்ள இயேசு செல்லவில்லை:

புதிதான எந்தச் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள இயேசு ஜெபாலயத்திற்கு சென்றிருப்பார்? இயேசுவே சத்தியம். எந்தப் புதிய சத்தியத்தையும் கேட்க அவர் ஜெபாலயத்திற்குச் செல்லவில்லை. அவர் அறியாதது

எதுவுமில்லை. அவருக்கு ஒன்றை அறிவிக்க எந்தவொரு பிரசங்கியும் அங்கு இல்லை. ஆனால் இயேசு ஜெப ஆலயத்திற்குச் சென்றார்.

புதிதாக எதையும் சபையில் சொல்லவில்லை, ஆகவே ஆலயம் செல்லப் பிரியமில்லை என்று சொல்லுகிற விசுவாசியே, இயேசு எதையும் புதிதாக அறிய வேண்டாத நிலையிலும் ஆலயம் சென்றது உனக்கொரு முன்மாதிரி இல்லையா? ஆதாமின் வீழ்ச்சி, நோவாவின் மீட்பு, ஆபிரகாமின் அழைப்பு, எலியாவின் எழுச்சி இவைகளையே கேட்டுகேட்டு சலித்து விட்டோம் என்று சொல்லுகிறாயா? எத்தனைமுறை கேட்டாலும் இயேசு இவைகளில் சலித்துப் போகவில்லையே!

உன்னிடமிருக்கும் ஆவிக்குரிய தாலந்தை உன் போதகர் பயன்படுத்துவதே இல்லையென்று வருத்தத்தோடு ஆலயம் செல்லாமல் நின்றுவிட்டாயா? தன்னைப்போல பேச எவரும் இல்லாதிருந்தும் இயேசு பிரசங்கம்பண்ண மாத்திரம் ஜெபாலயத்திற்குச் செல்லவில்லை. எழுந்து நின்று வேதத்தை வாசித்ததும் அவர் செய்த வேலைதானே. எவரும் செய்யக்கூடிய இந்த எளிய வேலையைத்தான் இயேசு செய்தார்.

உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைத் தரும் இயேசுவை மாத்திரம் பிரசங்கித்தால் சபையில் எதிர்ப்புமில்லை, மறுப்புமில்லை. ஆனால் உலகை விட்டுப் பிரிக்கும் தெய்வீக உன்னதங்களைப் பிரசங்க மேடை அறிவித்தால் சபைமக்கள் சபையை விட்டு

வெளியேறுகிறார்கள் அல்லது இயேசுவை சபையை விட்டு வெளியே தள்ளுகிறார்கள்.

ஞானத்தின் எல்லா பொக்கிஷங்களையும் தனக்குள்ளே பெற்றிருந்த இயேசு இந்த எளிய வேலையைச் செய்ய அங்கு போனார். அவர் கேட்ட பிரசங்கம் எல்லாம் ஏற்கனவே அவர் அறிந்தவைகள்தான். கேட்டவைகளையே திரும்பக் கேட்பதில் நீ அலுத்துப்போகாதே. நீ கேட்ட செய்திகள் பழையவைகளாய் இருப்பினும் பேசுகின்றவர் பழமையாய்ப் போகாத கர்த்தரே.

நீ வேதத்தை ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும் நீ நாளைய பத்திரிகையை வாசிக்கிறாய் என்பதை நினைவில் வை. நீ சனிக்கிழமைக்கேட்ட செய்தி ஞாயிற்றுக் கிழமையைப்பற்றி உன்னிடம் பேசுகிறது. நீ ஞாயிற்றுக்கிழமை கேட்கும் அதே செய்தி சினிக்கிழமையின் எதிரொலி அல்ல. திங்கட்கிழமையின் முன்னொலி. ஆகவே எல்லா செய்திகளும் உனக்குப் புதுமைதான்.

5. சபை உனக்குப் பாதுகாப்பல்ல:

எந்தவொரு மனச்சோர்வினாலோ, பிரச்சனையின் நெருக்கத்திற்காகவே இயேசு ஜெபாலயத்திற்குச் செல்லவில்லை. ஜெபாலயத்திற்குச் செல்வது அவரது வழக்கம். அது ஆவியின் தூண்டுதலினால் உண்டான பழக்கம். எட்டாம் நாளில் இயேசு சிறு பாலகனாய் ஆலயத்திற்குக் கொண்டுவரப்படும்போது சிமியோன் ஆவியின்

ஏவுதலினால் ஆலயத்திற்கு வந்திருந்தான். ஆகையால் அவன் கண்கள் இரட்சண்யத்தைக் கண்டன.

பாரம்பரிய வழக்கத்திற்காக ஆலயத்திற்குச் செல்லாதே. பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலின்படி ஆலயத்திற்குச் செல். ஆலயத்திற்குப் போகாவிட்டால் தேவதண்டனை வந்துவிடும் என்று ஆலயத்திற்குப் போகாதே. நமது ஆண்டவர் கொடூர சர்வாதிகாரி அல்ல. கர்த்தரின் சமூகத்திற்கு ஒருமுறை வரத்தவறிய தோமாவை ஆண்டவர் தூக்கியெறிந்துவிடவில்லை. அவனை ஆற்றியும், தேற்றியும், கண்டித்தும் தமது சமூகத்தில் சேர்த்துக்கொண்டார்.

சபை அங்கத்தினர் என்பது உனக்கு கௌரவப் பட்டமல்ல. ஆவிக்குரிய யுத்தத்திற்கு அது அழைப்புச்சீட்டு. சாத்தான் சபைக்கு விரோதமாக எழும்பும்போது நீயும் பாதிக்கப்படுவாய். ஏரோது சபைக்கு விராதமாக எழும்பும்போது யாக்கோபு பட்டயத்தால் வீழ்த்தப்பட்டான். பேதுரு சிறைபிடிக்கப்பட்டான். ஆகவே சபை உனக்குப் பாதுகாப்பு அல்ல.

சமுதாயம் சந்திக்க முடியாத தேவைகளையெல்லாம் சபை சந்திக்க வேண்டும். ஜாதி ஒழிப்பு, ஏற்றத்தாழ்வு இல்லாமை, பொருளாதார சமத்துவம், சமூக ஒற்றுமை, சமூக நீதி இவைகளையெல்லாம் ஒரு சபை தரவேண்டும். அக்கம்பக்கத்து குடிசைகள் பற்றியெரியும்போது சபை தன் உதவும் கரங்களை நீட்ட வேண்டும். பிற வீடுகள் பற்றியெரியும்போதும் நாம் ஆலயத்திற்குள் பத்திராய்

இருந்துகொண்டு "அக்கினி ஊடாய் நடந்தாலும்" என்று கைத்தட்டிப் பாடிக்கொண்டிருக்கக் கூடாது.

சபை நற்கிரியைகளில், சமூகப்பணிகளில் ஈடுபட வேண்டும். ஆழகான படிக்கட்டுகளோடு ஆலயம் கம்பீரமாய் அமைந்திருப்பதைப் பார்த்து, படிக்கட்டின் இருமருங்கிலும் அழகான பூச்செடிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றாயா? ஆலய வளாகத்தில், அங்கே சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கிற சப்பாணி எப்படி உள்ளே வருவான்? அலங்கார வாசலிலேயே அவனை நிறுத்திவிடுகிறாயே? "இயேசுவின் நாமத்தில் எழுந்து நட" என்று பேதுருவைப் போல, யோவானைப்போல சொல்ல முடியாவிட்டாலும் அந்தச் சக்கர நாற்காலியை உள்ளே தள்ளிக்கொண்டு வருவதற்கு வழியாவது செய்கிறாயா?

தெருவிலே ஒரே பரபரப்பு. ஜனங்கள் அங்கேயும் இங்கேயும் ஓடிக்கொண்டிருக்கின்றனர். என்னவென்று தெரியவில்லை. அனைவர் முகத்திலும் பதட்டம். ஓடிக்கொண்டிருந்த ஒருவரைப் பிடித்து, "தம்பி, என்ன நடக்கிறது; ஏன் எல்லாரும் இப்படி ஓடுகிறார்கள்" என்று ஒரு முதியவர் கேட்டார். "ஐயா, அடுத்தத் தெருவிலே முப்பது வருஷமாக இருந்த ஒரு ஆலயம் தீப்பிடித்து எரிகிறது. பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து நாசமாகிக்கொண்டிருக்கின்றன. அதை அணைக்கத்தான் எல்லாரும் ஓடுகிறார்கள்" என்றான் அவன்.

“அப்படியா, பக்கத்து தெருவிலே முப்பது வருஷம் இருந்த ஆலயமா? அப்படியொன்று இருப்பது எனக்குத் தெரியவே தெரியாதே. நானும் முப்பது வருஷமாக இங்கேதானே இருக்கிறேன்” என்று அவர் வியப்படைந்தார். முப்பது வருஷமாக ஒரு சபை இருப்பதே மற்றவர்களுக்குத் தெரியவில்லை என்றால் அந்தச் சபை இருந்தால் என்ன, எரிந்தால் என்ன?

ஆலய மணி ஓசை மட்டும் ஒரு சபை இருக்கிறது என்று அறிவிக்கக்கூடாது. ஆடல், பாடல்களும் துதி ஸ்தோத்திரங்கள் மாத்திரமே இங்கு ஒரு ஆலயம் இருக்கிறது என்று பறைசாற்றக்கூடாது. சபை கடவுளின் வல்லமையை வெளிப்படுத்த வேண்டும். கட்டிடம் அந்த வல்லமையை வெளிப்படுத்தாது. ஆலயம் சென்று வந்த நீதான் இயேசுவின் வல்லமையை தெருக்களில் வெளிப்படுத்த வேண்டும். ஜெப ஆலயத்தில் கர்த்தரைத் தொழுதுகொண்ட இயேசு, தெருக்களில் அற்புதங்களைச் செய்தார்.

6. ஜெப ஆலயங்களை அவர் தெரிந்தெடுக்கவில்லை:

நாசரேத்தில் இருக்கும்போது இயேசு நாசரேத் ஜெப ஆலயத்திற்கும், கப்பர்நகூமில் இருக்கும்போது அவர் கப்பர்நாகூம் ஜெப ஆலயத்திற்கும் சென்றார். எந்த ஊரில் அவர் இருந்தாரோ அந்த ஊர் ஜெப ஆலயத்திற்குச் செல்வது அவர் வழக்கம். இந்த ஜெப ஆலயத்திற்குப் போக வேண்டும் என்று ஜெப ஆலயத்தை அவராகவே தெரிந்தெடுக்கமாட்டார்.

ஸ்தல சபைகளை அலட்சியம் பண்ணும் இக்கால நவீன ஊழியக்காரர்கள் மத்தியில் இயேசு ஸ்தல சபைகளை மதித்தது நமக்கு ஒரு நல்ல முன் மாதிரி. “அரைத்த மாவையே அரைக்கும் சபைக்குப் போகதே” என்று சவால் விடும் இன்றைய ஊழியக்காரர்கள் மத்தியில் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருந்த ஜெப ஆலயத்திற்கு இயேசு சென்றதும் அறைகூவல்தான்.

உன் இதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கர்த்தர்தான் தரவேண்டும். நீங்களாக உங்கள் போதகர்களைத் தெரிந்தெடுக்க முடியாது. நீங்கள் போகும் சபை உங்கள் தீர்மானத்தின் விளைவு அல்ல. ஆவியானவரின் தெரிந்தெடுப்பு.

இயேசு நினைத்திருந்தால் ஜெப ஆலயம் அருகேயே ஒரு முகாமை நடத்தி ஆலயம் செல்வோரை வளைத்துப் பிடித்திருக்கலாம். ஜெப ஆலயத்தை விட்டு வெளியே வா, ஜெப ஊழியம் செய்வோம் என்று இயேசு முழக்கமிடவில்லை. அவருக்காக குறிக்கப்பட்ட ஜெப ஆலயத்திற்குச் சென்றார். உன் மனவிருப்பப்படி அடிக்கடி சபைகளை மாற்றிக்கொண்டிராதே.

7. ஜெப ஆலயங்களில் பாவிகளும் மாய்மாலக்காரரும்:

அவர் சென்ற ஜெப ஆலயங்களில் பரிசேயர் போன்ற மாய்மாலக்காரர்கள் உண்டு; பாவிகளும் உண்டு. ஆனாலும் இயேசு அந்த ஜெப ஆலயத்திற்குச் சென்றார். அங்கே சுமப்பதற்கரிய பாரமான

சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் தொடமாட்டார்கள். (மத் 23:4)

மிக அருமையான, கண்டிப்பான பிரசங்கங்கள். ஆனாலும் பிரசங்கித்தவர்களோ அவைகளைப் பின்பற்றுகிறதில்லை. ஆனாலும் இயேசு ஆலயத்திற்குச் சென்றார். போதகர் சரியில்லை என்று சபையை விட்டு விலகாதீர். சபையின் தலைவர் போதகர் அல்ல; நமது கர்த்தராகிய இயேசுவே.

யார் யாரெல்லாருமோ... பாவிகள், அக்கிரமக்காரர் யாவரும் சபைக்கு வருகிறார்களே என்று குற்றம் பார்க்காதீர்கள். ஸ்தல சபை என்ற வயலில், களைகளும் பயிரோடு வளரும். ஆலயத்தின் நிலை இப்படி இருந்தாலும், இயேசு ஜெப ஆலயம் செல்லத் தவறவே இல்லை.

உன் பக்கத்தில் தினமும் ஒரு பாவியான மனிதன் உட்கார்ந்து சபையில் கைகளைக் கொட்டி ஆராதிக்கிறானா? யூதாஸ் என்ற திருடனையும் இயேசு ஊழியத்தில் சகித்தார். ஆகவே சபைக்குச் செல்லாமல் இருக்காதே.

8. இயேசு இருந்த இடத்தில் வல்லமை வெளிப்படும் :

இயேசு இருந்த ஜெப ஆலயத்தில் ஆவிக்குரிய வல்லமை வெளிப்படும். அவர் இருக்கும் இடத்தில் மனிதனின் மறைவான சிந்தனைகள் வெளிப்படுத்தப்படும்.

சிமியோன் ஏற்கனவே சொல்லியிருக்கிறார், "அனேகருடைய இதய சிந்தனைகள் வெளிப்படும்படியாக அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" (லூக்கா 2:34) இயேசுவை ஏற்றுக் கொள்வதும் தள்ளுவதும் ஒரு மனிதனின் மறைவான சிந்தனைகள் என்ன என்பதை வெளியரங்கமாக்கும்.

"எலியாவின் நாட்களிலே கொடிய பஞ்சம் ஏற்பட்டபொழுது இஸ்ரவேலில் எந்த விதவையிடத்திலுமல்ல, சரெப்தா ஊரிலிருந்த விதவையிடமே அவன் அனுப்பப்பட்டான். உங்களில் ஒருவர் வீட்டிற்கும் இஸ்ரவேலின் தீர்க்கத்தரிசி அனுப்பப்படவில்லை. உங்களில் அனேக தொழு நோயாளிகள் அன்று இருந்தும் சீரியா தேசத்து நாகமானே கர்த்தரால் சுகமாக்கப்பட்டான். ஆகையால் இஸ்ரவேலர் என்ற மாம்சீகப் பெருமையில் இருக்காதீர்கள்" என்று அவர் சொன்னதும் அவர்களது சிந்தனைகள் கோபவெறிகொண்டு எழுந்தன.

பேதுரு இயேசுவைப்பற்றி பிரசங்கம் பண்ணும்பொழுது கேட்டவர்கள் இருதயத்தில் குத்துண்டவர்களாக அவரை ஏற்றுக்கொண்டனர். ஓன்றில் கிறிஸ்துவுக்காக எழுவார்கள் அல்லது அவருக்கு எதிராக விழுவார்கள். பவுல் பிரசங்கம் பண்ணும்பொழுது கலகம் ஏற்பட்டது. ஸ்தேவான் பிரசங்கம் பண்ணும்பொழுது கற்கள் எறியப்பட்டன.

இன்று மக்கள் அமைதியாயிருக்கிறார்களா? கண்ணீர்விட்டு கதறி கர்த்தரே தெய்வம் என்று ஓடிவருகிறார்களா? ஓன்றுமே நடக்காவிட்டால் இயேசு

அங்கே இல்லவே இல்லை! உன் வாழ்க்கை சலனமின்றி ஓடிக்கொண்டிருக்கிறதா! அமைதியான வாழ்க்கை என்று உலகம் மெச்சும். ஆனால் பரலோகமோ அதனைச் சவக்கிடங்கின் அமைதி என்றழைக்கும்.

கிறிஸ்துவுக்குள் உன் வாழ்க்கை அமைதியானத் தென்றல் அல்ல. பாவக்கோட்டைகளைத் தகர்க்கும் புயற்காற்றாய் எழும்புவதே கிறிஸ்தவ வாழ்க்கை.

புத்தகத்திலிருந்து...

"ஏன்தான் கடவுள் என்னை இப்படி சோதிக்கிறாரோ" என்று மனிதன் சீக்கிரம் அலுத்துக் கொள்கிறான். கடவுள் நம்மைச் சோதிக்கும்பொழுது நம்மை உருவாக்குகிறார். சாத்தான் நம்மைச் சோதிக்கும்பொழுது நம்மை உடைக்கவே விரும்புகிறான். (Through trails Satan tries to break us, while God tries to make us)

சாத்தான் இயேசுவை உடைக்கவே விரும்பினான். பிதா – குமாரன் என்ற உறவைத் துண்டிக்கவே அவன் விரும்பினான். "நீர் கடவுளுடைய குமாரனேயானால்" என்ற உறவை முறிக்கும் வார்த்தைகளையே சாத்தான் பயன்படுத்துகிறான். உன் கடவுள் எங்கே என்ற கேள்வியைப் பலரது எண்ணங்களில் உருவாக்குவதே சாத்தானின் பிரதான வேலை.

"எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்ட இயேசு" என்று (எபி 4:15) வேதம் சொல்கிறதே, அப்படியானால் மனிதனுக்கு ஏற்படும் எல்லா பாவச்சோதனைகளும் அவருக்கு இருந்தனவா? மனிதன் மண், பொன், பெண் என்று பலவிதத்திலும் சோதிக்கப்படுகிறானே, அப்படியே இயேசுவும் மனிதனைப்போல சோதிக்கப்பட்டாரா என்ற ஒரு கேள்வி எழலாம்.

பாவம் மனிதனுக்குள் வருவதற்கு மூன்று வழிகள் (Three Avenus) உள்ளன. அவை கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவியத்தின் பெருமை. இந்த மூன்று வழிகளிலும் வந்த சோதனைகளையெல்லாம் இயேசு ஜெயித்தார். மற்றபடி தனித்தனியாக ஒவ்வொரு பாவ சோதனையும் அவருக்கு உண்டாகாது.

இந்த மூன்று வழிகளிலும் சோதனைகளைக் கொண்டுவந்து சாத்தான் இயேசுவை உடைக்கப் பார்த்தான். உனக்கும் சோதனைகள் உண்டு; எனக்கு சோதனையே வரக்கூடாது என்று நீ ஜெபிப்பதில் பயனில்லை. சோதனையில் நின்று வெற்றிபெற ஜெபம்பண்ணு.

Saththiya Muzhakkam Ministries
#22, 1st West Cross Road, Gandhi Nagar,
Vellore- 632006. Cell : 98432 43554, 98430 43554